குர்ஆனை தேடும்...



- ஹிந்துக்கள்!
- கிறிஸ்தவர்கள்!
- நாத்திகர்கள்!

பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் இமாம்களுக்காக....

(ஒவ்வொரு பள்ளிவாசல் சார்ந்தும் பிற மதத்தவர்களுக்கு
இஸ்லாத்தை எத்தி வைக்க ஒரு டீம் இருத்தலின் அவசியம்)





MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust, 19 Thacker Street, Purasawalkam, Chennai 600 084

88388 92393

உலகம் படைக்கப்பட்டு, முதல் மனிதன் **ஆதமின்** உருவாக்கத்திற்கு பின் **மூன்று முக்கிய கொள்கைகளை** முன்னிறுத்தியே **இறைவன்** இந்த **உலகத்தை இயக்குகிறான்.** இன்னும் இவ்வுலகம் **முடிவு (அழிவு)க்கு வரும்** வரை **இவ்வாறே இயங்கும்.** அந்த **மூன்றையும்** கீழ்க்கண்ட **புத்தகங்கள்** மூலம் நீங்கள் தெளிவாக **அறிந்து கொள்ள முடியும்.** தவறாமல் **படிக்கவும்.** உங்கள் **சந்ததிகளையும்** படிக்க ஆர்வபடுத்தவும்.



ஏகத்துவம்



தூதுத்துவம்



மரணத்திற்கு பின்

குர்ஆனை தேடும்...

- ஹிந்துக்கள்!
- கிறிஸ்தவர்கள்!
- நாத்திகர்கள்!

தொகுப்பு:

இப்னு முஹம்மத்

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust
No.19, Thacker Street,
Purasawalkam.
Chennai 600 084.
Mobile: 88388 92393

FREE DISTRIBUTION ONLY
இலவச விநியோகத்திற்கு மட்டும்

ABOUT THIS BOOK

Name of the Book	:	**QURANAI THEDUM**
Author	:	**Ibn Muhammad**
Assisted by	:	Sheikh & Sheikh
Language	:	Tamil
Edition	:	1st Edition (June 2024)
Copies	:	1000
Total Pages	:	64
Published by	:	**MAS Foundation Trust** No.19, Thacker Street, Purasawalkam, Chennai - 600 084. Mobile: **88388 92393**

உள்ளே...

◈ பதிப்புரை.....05

1. அல்லாஹ் என்று ஏன் எழுதி இருக்கிறீர்கள்? இறைவா ! என்று தமிழில் எழுத வேண்டியதுதானே! – வஸந்தின் மனைவி!.....09

2. "எல்லோருக்கும் ஒரே இறைவன்தான்" என்று சொல்கிறீர்கள், அப்ப ஏன் சார் முஸ்லீம் பெண்ணை எங்களுக்கு கல்யாணம் பண்ணி தரமாட்டங்கிறீங்க? என்று கேள்விகளனூடே தன் கேள்வியை கேட்டார் நண்பர்கள் புடைசூழ வந்த– சுதீர்.....11

3. முஸ்லிம்கள் இத்தனை "கொலை" பண்ணினால் "சொர்க்கம்" கிடைக்கும் என்று எதுவும் அளவு கோல் இருக்கா சார்? – ஸ்ரீபன்.....13

4. பன்சிலால் தேடிய ஹிந்தி குர்ஆன்.....14

5. மூன்று தலைமுறையினருக்கும் எச்சரிக்கையாக சொன்ன குர்ஆன் வசனம்.....16

6. பகவத் கீதையை தேடியவனாக நம்மிடம் வந்த கண்ணன் என்னும் சிறுவன்.....19

7. பிராமணப் பெண்களும், ரிக் வேதமும்.....21

8. கடவுளே இல்லை என்று அம்மாவிடம் வாதிடுகிறானாம் 11வயது விஷ்ணுவர்த்தன்.....22

9. ஒண்ணுமே விளங்காத, படிக்கவே தெரியாத, வயதானவர்களின் நிலை என்ன? அவர்களுக்கு இஸ்லாமிய கொள்கை அதாவது ஓரிறைக் கொள்கை எப்படி போய்ச் சேரும் – அரவிந்தின் ஆதங்க கேள்வி!.....24

10. சர்ச்சில் வைக்கப்பட்டிருந்த இஸ்லாமிய புத்தகமும், கண்டெடுத்த சுசீலாவும்.....26

11. ஒரு தெய்வமா? பல தெய்வமா? 50 புத்தகம் வேணும் சார்! ஆர்டர் போட்ட புரபசர் பத்மநாபன்.....28

12. ஆட்டோவில் கண்ட ஹதீஸின் வாசகமும், சாந்தியின் கண்ணீரும்.....30

13. ரேஷன் கடை சரவணனின் குர்ஆன் தேடல்.....32

14. "சந்துரு" உருவில் ரயிலில் வந்த "கடவுள் மறுப்புக் கொள்கை".....34

15. ஷாலினி தேடிய மலையாள குர்ஆன்.....37

16. "அல்லாஹ்வைத் தேடிய 13 வயது விக்ரம்".....39

17. எப்படி சார் அந்த பாய்க்கு மட்டும் இது சாத்தியமாகுது? என்று ஆச்சரியப்பட்ட வினோத்!.....43

18. பெண் போலீஸ்காரர்களுடன் நடந்த கலந்துரையாடல்.....46

19. அம்மா அறிமுகப்படுத்திய 'கார்ல் மார்க்ஸ்' எனும் மகன்...48

20. விஜயராகவனின் மகளும், பேத்திகளும் "முஸலிம்கள்"...50

21. ஹோலி ரெடிமர்ஸ் டீச்சரும், ஸ்கூலில் வைக்க தேடிய குர்ஆனும்.....52

22. அப்ப இவ்வளவு நாளா நாங்க வணங்குவது தப்பா சார்? – கணேஷ்.....53

23. அன்பளிப்பாக சென்ற குர்ஆன் ஒரு விட்டில் ஏற்படுத்திய மாற்றம்.....55

24. அன்பளிப்பாக பெறப்பட்ட குர்ஆன மூலம் நாத்திகப் பேராசிரியருக்கு நேர்ந்தது என்ன?.....57

25. பலவித தேடல்களோடு மக்களும், தாவா ஸ்டாலும்.....62

◈ இறுதியாக.....64

◆◈◈◈◆

பதிப்புரை

அன்பார்ந்த பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் இமாம்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு!

அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால் இன்று சோசியல் மீடியாவின் தாக்கத்தினால் உலகம் முழுவதும் இஸ்லாமிய விழிப்புணர்வும் மற்றும் ஓரிறை கொள்கையின் தாக்கமும் அதிகமான மக்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவாம்.

இந்நிலையில் படிப்பறிவில், சிந்திப்பதில் தெளிவு கொண்ட தமிழ் மக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. எவ்வளவு ஆர்வமாக ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களும், நாத்திகர்களும் குர்ஆனை படிக்க தேடுகிறார்கள் என்பதற்கு உங்கள் கையில் தவழும் இந்த புத்தகமே சாட்சி.

நம் முஹல்லா மற்றும் பள்ளிவாசல் அருகில் வசிக்கும் பிற மதத்தவர்களுக்கும் அதன் தாக்கம் இருக்கவே செய்யும். ஆனால் அவர்களின் எப்படி/யாரிடம் கேட்பது என்ற கூச்ச சுபாவமோ அல்லது நம்மின் (நாம் எப்படி அவர்களிடம் வலிய சென்று இஸ்லாத்தை, ஓரிறை கொள்கையை சொல்வது என்ற) தயக்கம்மோ, அவர்களிடம் மற்ற விஷயங்களை சகஜமாக பேசிக் கொண்டாலும் **ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை** சம்மந்தமாக அவர்களிடம் நம்மில் பெரும்பாலோர் பேசுவதுமில்லை, எத்திவைப்பதுமில்லை. இது இப்படி தொடர்வதில் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை.

சமீபத்தில் நடந்த பொருட்காட்சி மற்றும் தெரு முனைகளில் போடப்படும் **"இலவச குர்ஆன்"** தாவா ஸ்டாலினால் ஈர்க்கப்பட்டு ஆர்வமாக தாமாகவே வந்த ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள

மற்றும் நாத்திகர்களுடன் கலந்துரையாடல் நடத்தி, இஸ்லாத்தை மற்றும் ஓரிறை கொள்கையை எத்தி வைத்து, அது சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் குர்ஆன் கொடுத்த சம்பவமே இங்கு தொகுத்து கொடுக்கபட்டுள்ளது சிம்பிளாக அவர்களிடம் எப்படி எல்லாம் செய்தியை சொல்லலாம் என்பதை இதன் மூலம் அறிய முடியும் இன்ஷா அல்லாஹ்.

நமக்கு இஸ்லாம் வந்து சேர்ந்திருக்கிறது இனி இறை தூதர் வரப்போவதில்லை நாம் தான் அந்த பணியை செய்ய வேண்டும் என்று நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்.

நம் மீது கருணை கொண்டு அல்லாஹ் நம் மூதாதையர்களை ஓரிறைக் கொள்கையை ஏற்க செய்து அதில் அவர்களை நிலைத்திருக்க செய்து நமக்கும் அதை கொண்டு வந்து சேர்த்திருக்கிறான். அல்ஹம்துலில்லாஹ்!

உண்மை இறை தேடலிலும், யார் அந்த ஓர் இறைவன்? என்ற தேடலிலும் ஆளாய் தவிக்கிற வெகுஜன மக்களுக்கு உண்மையை அறியத் தருகின்ற ஒரு செயலை நாம் சார்ந்திருக்கும் பள்ளிவாசல் மற்றும் முஹல்லாவில் உள்ள நிர்வாகிகளும் , இமாம்களும் ஒரு சிறு குழு (டீம்) உருவாக்கி இரண்டு வழிகளில் இந்த செய்தியை பள்ளிவாசல் சுற்றி வாழும் மக்களிடம் கொண்டு சேர்க்கலாம் இன்ஷா அல்லாஹ்.

1. **ஓதி ஊத காலையும் மற்றும் மாலையும் வரும் மக்களுக்கு இஸ்லாத்தை பற்றிய புத்தகங்கள் மற்றும் மடக்கு ஓலைகள் (Phamplets) அவர்களே எடுத்து கொள்ளும்படி செய்து கொள்ளலாம்.**

2. வாரம் ஒருமுறை "இலவச குர்ஆன்" என்ற போர்டுடன் கூடிய ஒரு தாவா ஸ்டால் நம் பள்ளி அருகில் உள்ள மெயின் ரொடில் குறைந்த பட்சம் வாரம் ஒரு முறை 2 மணி நேரம் போடலாம்.

இதற்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் புத்தக தேவைக்கு **88388 92393** என்ற நம்பரை அணுகவும். இன்ஷா அல்லாஹ் ஏற்பாடு செய்து தரப்படும் இன்ஷா அல்லாஹ்.

நம் மீது கடமையான இப்பணியை எப்படியாயினும் தொடர்ந்து செய்ய வேண்டும். இநத புத்தகத்தை படிக்கும்போது எப்படி பல தரப்பட்ட மக்களெல்லாம் இந்த இறுதி வேதத்தை குர்ஆனை படிக்க ஓடோடி வந்து ஆர்வமாய் வந்து வாங்கிச் சென்றார்கள் என்பதை அறிய முடியும்.

மேலும், இதனை படிக்கும் பொழுது உங்களுக்கு ஒரு உண்மை விளங்கும் அதாவது நாம் போய் யாருக்கும் இஸ்லாத்தை ஓரிறைக் கொள்கையை சொல்லவில்லை மாறாக நாம் தாவா ஸ்டால் போட்டிருக்கும் இடம் தேடி வந்து விளக்கம் பெற்று வாங்கிச் செல்லவே மக்கள் தயாராக உலவுகிறார்கள் என்பதை உணரலாம்.

இந்த தொகுப்பு வெளியிடுவதின் நோக்கம் நீங்கள் வசிக்கும் முஹல்லா மற்றும் பள்ளிவாசல் சார்ந்து ஒரு தாவா ஸ்டாலும், அதே மாதிரி ஓதி ஊத வரும் மக்களுக்கும் புத்தகங்கள் கிடைக்க வசதி ஏற்படுத்தி உங்கள் இடங்களிலும் இறைத்தேடல் உள்ள மக்களுக்கு ஓரிறைக் கொள்கையை இஸ்லாத்தை கொண்டு சேர்க்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே!

ஏனெனில் அழைப்பு பணி பற்றி நம்மை படைத்த அல்லாஹ் கூறும்பொழுது

நீங்கள் மனித குலத்துக்காக தேர்வு செய்யப்பட்ட சிறந்த சமுதாயமாக இருக்கிறீர்கள் நன்மையை ஏவுகிறீர்கள் தீமையை தடுக்கிறீர்கள் (குர்ஆன் 3 : 130)

எல்லா பள்ளிவாசல்களிலும் ஒரு தாவா ஸ்டால் கண்டிப்பாக இருக்கவேண்டும் இதை படிப்பவர்கள் பள்ளி நிர்வாகிகள் இமாம்கள் அனைவரும் முன் வரவேண்டும் என அழைப்பு விடுத்து நிறைவு செய்கிறேன்.

மக்களுக்கு மிக பயனுள்ளதாக இந்நூல் அமைய உலக மக்கள் அனைவருக்கும் ஓரிறைக் கொள்கை போய்ச்சேர ஒரு உந்து சக்தியாக இந்நூல் இருக்க அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடுகிறேன்!!!

யா அல்லாஹ் எங்களுக்கு உதவி செய்!

யா அல்லாஹ் எங்களுக்கு இலகுவாக்கி வை!

◆◈◈◈◆

1. அல்லாஹ் என்று ஏன் எழுதி இருக்கிறீர்கள்? **இறைவா!** என்று தமிழில் எழுத வேண்டியதுதானே! **- வஸந்தின் மனைவி**



குர்ஆன்லாம் வேணாம் சார்! சின்னதா ஏதாவது புக்தாங்க! இவ்வளவு பெரிய புக்லாம் படிக்க முடியாது சார்! என்றார். வசந்த் உடன் வந்த அவர் மனைவி! நீங்க அவ்வளவு பெரிய புகலாம் படிக்க வேண்டாம், சொல்றத மட்டும் கேட்டுக் கொள்ளுங்கள் என்று **ஓரிறைச் செய்தியை** விரிவாக விளக்கினோம். கையில் **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** புத்தகத்தை கொடுத்திருந்தோம்.அதை நோட்டபிட்டவராக, **"இறைவா"** என்பதின் அரபி வார்த்தை தான் **"அல்லாஹ்"** என்று சொன்னீர்கள்! அப்ப அப்படியே தமிழிலேயே குறிப்பிடலாமே! ஏன் **"அரபி"** வார்த்தையான **"அல்லாஹ்"** என்று போட்டிருக்கிறீர்கள் என்றார். சூப்பர் கேள்வி மேடம், என்றவராக! கீழ்க்கண்ட விளக்கத்தை எடுத்துரைத்தோம்.

"அல்லாஹ்" என்ற அரபி வார்த்தையையே ஏன் ஒருமித்த நிலையில் **இறைவனுக்கு** உபயோகப்படுத்தைகிறார்கள் என்றால் அந்த ஒரு **வார்த்தை** மட்டும்தான் **ஒரே கடவுளை ஞாபகபடுத்தும்**. வேற எந்த மொழி வார்த்தைக்கும் அந்த தன்மை கிடையாது என்று விளக்கினோம்.

உதாரணமாக, இப்ப நீங்க இந்த பொருட்காட்சி கூட்டத்தில் நடுவில் போய் நின்று மைக்ரோபோனில் **"கடவுளே"** என்று சத்தமாக சொன்னீர்கள், என்றால் எல்லாரும் சத்தத்தை கேட்டு திரும்பி

பார்ப்பாங்க ஆனா அவங்க அவங்க பெற்றோர் சொல்லித்தந்த கடவுள் தான் அவர்கள் மனதில் ஞாபகம் வரும்.

இதே மாதிரி நீங்கள் **Oh God** அப்படின்னு ஆங்கிலத்தில் சத்தம் போட்டு அதே மைக்ரோ போன்ல சொன்னாலும் எல்லாரும் திரும்பி பார்ப்பாங்க, ஆனா எல்லாரும் மனதிலேயும் அவரவர்கள் பெற்றோர் சொல்லித்தந்த கடவுள் தான் ஞாபகம் வருமே தவிர ஒரே இறைவன் ஞாபகம் வராது

ஆனால் நீங்கள் அங்க போய் நின்றுகிட்டு **அல்லாஹ்** என்று சத்தமா சொன்னீங்கன்னா முதல்ல எல்லோர் மனதிலும் என்ன வராதுன்னு சொன்னா **உருவம் வராது** அமெரிக்காவில் இருக்கிறவன் **அல்லாஹ்**ன்னு சொன்னாலும் அது ஒரே இறைவன் தான் அயனாவரத்தில் இருக்கிறவன் **அல்லாஹ்**ன்னு சொன்னாலும் அது ஒரே இறைவன்தான். அதனாலதான் உலகம் முழுமையும் ஒரே இறைக் கொள்கையை பின்பற்றுபவர்கள் அல்லாஹ் என்ற அந்த வார்த்தையை உபயோகப்படுத்துவதை காணலாம் அப்படி நாம் சொன்னதும் **"உண்மைதான் சார், இப்ப புரியுது"** என்றார் வஸந்தின் மனைவி!


வேற எதுவும் சொஸ்லாதீங்க சார் இன்றைக்கு நிறைய செய்தி கேட்டுவிட்டோம், இந்த புத்தகமே இப்போதைக்கு போதுமானது என்றவாறே கணவருடன் நடையை கட்டினார்.

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

2. "எல்லோருக்கும் ஒரே இறைவன்தான்" என்று சொல்கிறீர்கள், அப்ப ஏன் சார் முஸ்லீம் பெண்ணை எங்களுக்கு கல்யாணம் பண்ணி தரமாட்டங்கிறீங்க? என்று கேள்விகளனூடே தன் கேள்வியை கேட்டார் நண்பர்கள் புடைசூழ வந்த - சுதீர்

அருமையான கேள்வி! சுதீர் என்று சொல்லியவாறு **சூரா பகராவின் 2:221** வசனத்தை சொல்லி அவர்களுக்கு எளிதாக புரியும் விதத்தில் விளக்கினோம்.



(அல்லாஹ்வுக்கு) இணை வைக்கும் பெண்களை அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்; இணை வைக்கும் ஒரு பெண், உங்களைக் கவரக்கூடியவளாக இருந்தபோதிலும், அவளைவிட முஃமினான ஓர் அடிமைப் பெண் நிச்சயமாக மேலானவள் ஆவாள்; அவ்வாறே இணைவைக்கும் ஆண்களுக்கு அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வரை (முஃமினான பெண்களுடன்) நீங்கள் திருமணம் செய்து வைக்காதீர்கள்; இணை வைக்கும் ஆண் உங்களுக்குக் கவர்ச்சியூட்டுபவனாக இருந்த போதிலும், ஒரு முஃமினான அடிமை அவனைவிட மேலானவன்; (நிராகரிப்போராகிய) இவர்கள், உங்களை நரக நெருப்பின் பக்கம் அழைக்கிறார்கள்; ஆனால் அல்லாஹ்வோ தன் கிருபையால் சுவர்க்கத்தின் பக்கமும், மன்னிப்பின் பக்கமும் அழைக்கிறான்; மனிதர்கள் படிப்பினை பெருவதற்காக தன் வசனங்களை அவன் தெளிவாக விளக்குகிறான்.

முஸ்லிமான பெண்ணை தாராளமாக நீங்கள் மண முடிக்கலாம் அதற்க்கான இரண்டு அடிப்படை அளவுகோல் **நீங்களும் ஒரே இறைவனை மட்டுமே வழிபட வேண்டும்** மற்றும் அந்த **பெண்ணும் உங்களை மணமுடிக்க விருப்பம் தெரிவிக்க வேண்டும்** என்றோம். **இப்ப புரிகிறது சார்!** என்றார் சுதீர். இவர் கேள்வியை முடித்த உடன், மற்றவர்கள் தங்கள் பங்குக்கு கேள்வி கேட்க போட்டி போட ஆரம்பித்தார்கள்..

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

3. முஸ்லிம்கள் இத்தனை "கொலை" பண்ணினால் "சொர்க்கம்" கிடைக்கும் என்று எதுவும் அளவு கோல் இருக்கா சார்? - ஸ்ரீபன்



மூன்று **மெத்த படித்த** இளைஞர்கள் நம்மிடம் நிறைய நேரம் செலவிட்டு செய்திகளை முழுமையாக கேட்டுவிட்டு கேள்விக்கு தாவினார்கள். எப்ப பாரத்தாலும் செய்திகளில் முஸ்லீம்களுடன் சம்பந்தப்படுத்தி கொலை செய்திகளையே கேள்விப்படுகிறமே, இத்தனை கொலை பண்ணினால் சொர்க்கம் கிடைக்கும் என்று எதுவும் சொல்லப்பட்பிருக்கிறதா சார்? என்று கேட்டார் ஸ்ரீபன்.

ஸ்ரீபன், இதற்க்கு நேர் **opposite** ஆகதான் குர்ஆனில் இறைவன் கட்டளை இடுகிறான். அதாவது நியாயமின்றி ஒரு உயிரை கொலை செய்பவர், ஒட்டு மொத்த மனித சமுதாயத்தையும் கொலை செய்ததற்க்கு சமம் என்று ஆரம்பித்து கொலை சம்பந்தமான அத்தனை குர்ஆன் விளக்கத்தையும் எடுத்துரைத்தோம். இவ்வளவு தெளிவாக இருக்கிறதே சார்! பின்பு ஏன்? இந்த மாதிரி தவறாக சித்தரிக்கப்படுகிறது? என்றார். எப்படி சித்தரிக்கப்படுகிறது, அதன் பின்புலம் என்ன என்பதையும் விளக்கினோம்! புரியுது! புரியுது! என்றவாறு அடுத்த கேள்விக்கு தாவ ஆயத்தமானார்.

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

4. பன்சிலால் தேடிய ஹிந்தி குர்ஆன்



ஹிந்திமே குர்ஆன் ஹே! என்று கேட்டவாறு வந்து நின்ற மனிதருக்கு சுமார் 45 வயது இருக்கும். வழக்கமாக நாம் கேட்கக்கூடிய கேள்வியான **"குரானை நீங்கள் தேடுனீங்களா சார்"** இல்ல **"Free Quran போர்ட பார்த்து வந்தீங்களா"** என்று ஹிந்தியில் கேட்க அவர் உடனே இல்ல அடிக்கடி **TVல மௌலவி சாப்** மற்றும் ஹிந்து குருக்கள் இவர்களிடையே பேச்சுவார்த்தை நடக்கும் பொழுது சில நேரங்களில் **குர்ஆனில் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது, இந்த ஹதீஸை இப்படி விளங்கனும்** அப்படிங்கிற மாதிரி **மௌலவி சாப்** சொல்லுவாங்க, தொடர்ந்து இந்த செய்திகளைப் பார்ப்பேன், கேட்பதற்கும் நன்றாக இருக்கும். அதனால இந்த **குர்ஆனில் என்ன இருக்கிறது** அப்படிங்கிறத தெரிஞ்சுக்கலாம் என்றவாறு வந்த ஹிந்திக்காரரின் பெயர் பன்சிலால், சுமார் 20 வருடங்களாக தமிழ்நாட்டில் வசிப்பதாகவும் நம்மிடம் சொன்னார்.

ரொம்ப சந்தோஷம் **நீங்க படிக்க வேண்டிய ஒரு அவசியமான புத்தகம் தான் இது** என்று நாம் சொல்லி முடிக்க முன்னரே நான் இதை படிச்சி முடிச்சிட்டு (வேஸ்ட் பண்ணாம) என்னுடைய முஸ்லிம் பிரண்ட்ஸ்க்கு கொடுத்துடுவேன், ரொம்ப முக்கியமான வேத புத்தகம் இல்லையா அப்படி என்று அவர் சொன்னார். நாம் உடனே இதை படிச்சிட்டு நீங்க முஸ்லிம் பிரண்ட்ஸ்க்கு எல்லாம் கொடுக்காதீங்க, இதை உங்களை சார்ந்து இருக்கக்கூடிய உங்களுடைய ஹிந்து நண்பர்களுக்கே படிக்க கொடுங்க! அவர்களுக்கும் குர்ஆனைப்பற்றி அறிய உதவும் என்று நாம் சொல்ல, அவர் நானே போய் எங்களைச் சார்ந்த ஹிந்து நண்பருக்கு டைரக்டா கொடுத்தா அவங்க என்ன தப்பா நினைப்பாங்க!

அதனாலதான் நான் சொன்னேன் அப்படின்னார். உடனே நாம் அவரின் நிலையை புரிந்து கொண்டு ஒன்னும் பிரச்சனை இல்ல, **நீங்க இதை படிக்க முற்பட்டாலே இதை நீங்க வேற யாருக்கும் கொடுக்க மாட்டீங்க! ஏனென்றால் உங்களுடைய வாழ்வின் தேவைக்கு ஒரு ரெஃபரன்ஸ் புக்காக கண்டிப்பாக இதை வச்சுக்கிடுவீங்க அந்த அளவுக்கு இதன் செய்திகள் உங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி விடும்** என்று நாம் சொல்ல அவர் மிக சந்தோஷத்தோடு அதை வாங்கிக் கொண்டார்.

அதோடு சேர்த்து நாம் அவருக்கு **"ஏக் பகவான் யா அநேக் பகவான்"** (ஒரு தெய்வமா? பல தெய்வமா?) என்ற புத்தகத்தின் ஹிந்தி QR Code ஸ்கேன் பண்ண கொடுத்து இதை நீங்க ஸ்கேன் பண்ணி படித்தீர்கள் என்றால் கடவுள் கொள்கையை தெளிவு படுத்திவிடும் என்று நாம் சொல்ல அவர் மிக சந்தோஷத்தோடு அதையும் வாங்கிக் கொண்டு சென்றார்.

பன்சிலாலுக்கு **குர்ஆனை படிக்கனும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்திய TVயில் வந்த மௌலவி சாப் அவர்களுக்கும், பன்சிலாலுக்கு குர்ஆனை தீவுத்திடலில் கிடைக்கச்** செய்வதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து மக்களுக்கும் அல்லாஹ் இரு உலகிலும் பரிபூரண கூலி வழங்கிடுவானாக!

இதன் மூலம் குர்ஆனை தேடும் மக்கள் அதிகரிக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம். கொடுப்பதற்கான வாய்ப்பை நாம் வசிக்கும் இடத்தில், ஊரில் ஏற்படுத்துவோமா?

முன்வாருங்கள் சகோதரர்களே! உங்களது முஹல்லா சார்ந்து ஒரு தாவா ஸ்டாலை ஏற்படுத்துங்கள்! **குர்ஆனை தேடும் எத்தனையோ பன்சிலால்களுக்கு** அது உதவலாம். இன்ஷா அல்லாஹ்!

◆◈◈◈◆

5. மூன்று தலைமுறையினருக்கும் எச்சரிக்கையாக சொன்ன குர்ஆன் வசனம்



வித்தியாசமான வயது களுடைய சில பெண்கள் குர்ஆனை படிக்க ஆர்வபட்டு வாங்க வந்தவர்களுக்கு நாம் விளக்கம் சொல்ல முற்பட்டோம். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டார்கள். நாம் உடனே முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்று தெரியுமா? என்று கேட்க, நீங்களே சொல்லுங்க அப்படின்னு அவர்களில் நடுத்தர வயதுடைய ஒரு பெண்மணி சொல்ல நாம் வழக்கமாக ஆபிரகாமுக்கு - இப்ராஹிமுக்கு இரண்டு மக்கள் ஒன்று இஸ்மாயில் மற்றொன்று இஸ்ஹாக் என்றும், இஸ்ஹாக் உடைய வழித்தோன்றல் தான் மோசஸ்ஸும், ஜீசஸ்சும். இஸ்மாயில் உடைய வழித்தோன்றல் தான் **முஹம்மது நபி (ஸல்)**. முஹம்மது நபி தெரியுமா? என்ற கேட்க அவர்கள் தெரியும் என்று சொன்னார்கள்.

நீங்க படித்திருக்கக்கூடிய புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டிலே கவனித்தீர்கள் என்றால் கடைசியாக ஒரு இறைத்தூதர் இஸ்மாவேல் சமூகத்தில் பிறப்பார் என்று ஏற்கனவே முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறதை பார்த்திருக்கலாம் என்றோம். அந்த முன்னறிவிப்பை பூர்த்தி செய்ய வந்தவர் தான் கடைசி இறைத்தூதரான முஹம்மது நபி (ஸல்) என்ற விளக்கம் சொல்லி அந்த முஹம்மது நபிக்கு 23 வருட காலத்துல இறைவன் தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பின் வழங்கிய வசனங்களின் தொகுப்புத் தான் இன்று நீங்க படிக்க ஆர்வப்பட்டு வாங்கி செல்லும் குரான் என்று விளக்கினோம்.

So, இரண்டு விஷயங்களை நீங்க மனசுல வச்சுக்கணும் ஒன்று **கடைசி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்)** என்பதும் இரண்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேதம் குரான் என்பதும். இதுதான் **கடைசி இறை வேதம்.** உலகம் அழியும் வரைக்கும் இதற்கு அப்புறம் எந்த தூதரும் வர மாட்டாங்க, எந்த வேதமும் வராது. இதை கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கண்டிப்பாக படித்து தெளிவு பெற வேண்டும். உங்களுக்காக இயேசு மற்றும் மேரி பற்றி குர்ஆன் கூறும் வசனங்களை தொகுத்து இலகுவாக்கி இருக்கிறோம் என்று **இயேசு மற்றும் மேரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்** என்ற புத்தகத்தையும் கொடுத்து விட்டு, உண்மையை நீங்கள் உணர்ந்த பின் ஏற்றே ஆக வேண்டும் ஏனெனில் ஒன்று அதன் **முன்னறிவிப்பு** (தூதரும், வேதமும் வரும் என்று உங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது) இரண்டு நீங்கள் இந்த புத்தகத்தை படித்து பார்க்கும் பொழுது அந்த **இறை வசனங்களில் உண்மையை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.** இதில் நாம் அசட்டையாக இருக்க முடியாது என்ற மேலதிக விளக்கத்தையும் கொடுத்தோம். காரணம் என்னவெனில் குர்ஆனில் ஒரு வசனம் இருக்கிறது.

"எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியவர்களுக்கும் வழிப்பட்டோம்; அவர்கள் எங்களை வழி கெடுத்துவிட்டார்கள்" என்றும் அவர்கள் கூறுவார்கள்.

"எங்கள் இறைவா! அவர்களுக்கு இரு மடங்கு வேதனையைத் தருவாயாக; அவர்களைப் பெருஞ் சாபத்தைக் கொண்டு சபிப்பாயாக" (என்பர்). குர்ஆன் 33:67-68

அன்னாளில் ஒரே இறைவனையும் அவருடைய தூதரையும் முற்றிலும் அறிந்த பின்னும் ஏற்காத மக்களை இறைவன் நரகத்தில் போடுவான். அப்பொழுது நரகத்தில் இருக்கக்கூடிய மக்கள் தத்தமது பெற்றோரை குற்றஞ்சாட்டி மேற்சொன்ன வசனத்தில் உள்ளதை சொல்வார்கள்.

நீங்கள் உங்க பெற்றோரை காட்டி கொடுத்துடுவீங்க உங்க பிள்ளைகள் உங்கள காட்டிக்கொடுத்து விடும் என்று நாம் அவர்களிடம் (நெடுநேரம் பொறுமையுடன் நாம் சொல்வதை செவிமடுப்பது கண்டு) தன்மையுடன் விளக்கினோம்.

ஒரு உண்மையை நாம் படித்து தெரிய வேண்டியது மட்டுமல்லாமல், அதை அலசி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையிலும் நாம் இருக்கிறோம் ஏனெனில் பொடுபோக்காக கடந்து செல்வதற்காக நாம் இந்த உலகிற்கு வாழ அனுப்பப் படவில்லை என்பதை நாம் உணர வேண்டும் என்பதை நாம் அவர்களுக்கு வலியுறுத்தி கூறினோம்.


அவர்கள் சொன்ன செய்திகளை மிக அக்கரையுடன் கேட்டுக் கொண்டு நாங்கள் படித்து தெளிவு பெறுகிறோம் என்று கூறினார்கள்.

இறைவா! அந்த மூன்று தலைமுறையினருக்கும், அவர்களைச் சார்ந்த மக்களுக்கும் நேர்வழி காட்டு!

இந்த வாய்ப்பை வழங்கியவர்களுக்கும் இரு உலகிலும் அருள்புரி யா அல்லாஹ்!

◆◈◈◈◆

6. பகவத் கீதையை தேடியவனாக நம்மிடம் வந்த கண்ணன் என்னும் சிறுவன்...



இரண்டு சிறுவர்களுடன் வந்த பெற்றோர், அதில் தாய், கண்ணன் என்ற அந்த சிறுவனை கைக்காட்டியவாறே ரொம்ப நாளாக இவன் பகவத் கீதை வேணும், அதை படித்துப் பார்க்கனும் என்று சொலலிக்கிட்டே இருக்கிறான் சார்! ஒன்னு கொடுங்க சார் அவனுக்கு! என்றார் அந்த தாய்!

இங்கே பகவத் கீதை கொடுக்கலியம்மா! குர்ஆன்தான் கொடுக்கிறோம் என்று சொல்ல, பையனுடைய சட்டையை பிடித்து இழுத்தவாறே திரும்ப எத்தனிக்கையில் நாம் சுதாரித்தவாறே, அதனால் என்னம்மா, பையனுக்கு இந்த சின்ன வயசுலயே படிக்கணும் என்று ஆர்வமாக இருக்கிறான் அவனுக்கு இந்த குர்ஆன் எனறால் என்ன? அது என்னவெல்லாம் சொல்கிறது அப்படின்னு சில டிப்ஸ்களை நான் சொல்லி தரேன் அவனும் தெரிஞ்சுக்கட்டுமே! நீங்க பகவகத் கீதையை வேற ஏதாவது ஒரு கடையில வாங்கி அதையும் கொடுங்க அதையும் அவன் படிக்கட்டும். பலவித புத்தகங்கள் என்ன சொல்லுது என்பதை தெரிந்து பகுத்தறிய, உண்மையை ஏற்று பின்பற்ற அவனுக்கு ஒரு உதவியா இருக்கும் அப்படின்னு நான் சொன்ன உடனே தயங்கியவாறு அந்த தாய் இரண்டு சிறுவர்கள் மற்றும் கணவருடன் நம் அருகில் வந்தார். நாம் அவர்களுக்கு விளங்கக்கூடிய வகையிலே தெளிவாக எடுத்துரைத்ததும் அவர்களும் சந்தோஷத்துடன் வரும் போது இருந்த தயக்கம் நீங்கி புன்முறுவல் பூத்தவர்களாக, சிரித்துவர்களாக நம்மிடம் விடை பெற்று சென்றனர். பகவத் கீதை தேடிய **கண்ணனுக்கு குர்ஆனை பற்றிய செய்தியை**

விளங்க வாய்ப்பு கொடுத்த அந்த அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**



7. பிராமணப் பெண்களும், ரிக் வேதமும்

மிக பவ்யமாகவும், செருப்பை கழற்றியவர்களாகவும் குரானை வாங்க வந்த இரண்டு நடுத்தர வயதுடைய பிராமணப் பெண்களிடம், **குரானைப் பற்றி** எதுவும் தெரியுமா? என்று எதேச்சையாக நாம் கேள்வி கேட்க, அய்யோ, இது **"ரிக் வேதமாச்சே",** ரொம்ப பாக்யமானது, எனக்கு ரொம்ப நாளாக வாங்கி படித்துப் பார்க்கனும் என்ற எண்ணம் இருந்தது என்று அவர்களே பீடிகை போட்டார்கள். நாமும் அதே ஸ்பீடில் ரிக் வேதம் சொல்லும் **"ஓரிறை கோட்பாட்டை" வலியுறுத்தி சொல்லும் கடைசி இறை வேதம்தான் குர்ஆன்!** என்று சொல்லியவாறு, ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை பற்றி விளக்கமளித்தோம்.

கடைசி இறை வேதமாகிய **குர்ஆனை** இப்பூமியில் உள்ள அனைவரும் கண்டிப்பாக ஒரு முறையேனும் படிக்க வேண்டிய அத்தியாவசியமானது என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, நீங்கள் சொல்வது உண்மைதான். இவ்வளவு நாள் கழித்து **எங்களுக்கே அந்த ஆர்வம் இருக்கிறதே!** என்றார்கள். ஆர்வமுள்ள இவர்களுக்கு **நேர்வழி காட்டிடு இறைவா!** என்று பிரார்த்தித்த வண்ணம் அனுப்பி வைத்தோம்.

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

8. கடவுளே இல்லை என்று அம்மாவிடம் வாதிடுகிறானாம் 11வயது விஷ்ணுவர்த்தன்



"இலவச குர்ஆன்" என்ற சத்தம் கேட்டு ஒரு 11 வயது பையன் அம்மாவை அழைத்து கொண்டு அருகில் வர, என்ன தம்பி குர்ஆன் படிக்க ஆர்வமா? என்று கேட்டவாறே விளக்க முற்பட, அந்த அம்மா வேணாண்டா, இதெல்லாம் வாங்கிட்டு போனா 'அப்பா திட்டுவாறு' என்று சொல்ல, பையன் நம்மிடம், **uncle, you tell me, you tell me** என்று ஆர்வம் காட்ட, உடனே அந்த அம்மா அவனிடம் "இஸ்லாம், கிறிஸ்தவம் எல்லாமே இந்து மதத்திலிருக்கும் உட்பிரிவுகள்தான் (இந்த மாதிரி சொல்லிதான் அவனை மட்டுப்படுத்தி வைத்திருக்கிறாள் அந்த தாய்) என்று சமாதானம் சொல்லி அவனை இழுக்க, கடைசியில் எதையுமே சொல்லி விளக்க முடியாமல், அந்த பையனும் மனமில்லாமல் போக முற்படுகையில் அவன் கையில் **"One God? Or many gods?"** என்ற புத்தகத்தை கொடுத்து அனுப்பும்போது, அந்த அம்மாவிடம் நான் சொன்னேன், **நீங்கள் பையனுக்கு தெளிவான மற்றும் எதார்த்த உண்மைகளை விளங்குவதை விட்டும் தடுத்தீர்கள்?** என்றால் அவன் பின்னாளில் கடவுள் மறுப்பு கொள்கையின்பால் சென்றுவிட வாய்ப்பு உண்டு என்று நாம் சொல்ல, அவன் இப்பவே 'கடவுளே இல்லை' என்று வீட்டில் சொல்லிக் கொண்டிருக்கிறான் சார்! என்று சொன்னார். அதற்க்கு காரணம் நீங்கதான் என்றோம்! ஏனெனில் அவன் ஒரு அறிவாளியாக (Intelligent) இருக்கிறான். அவனுக்குண்டான தெளிவை, அவன் தேடுகின்ற விளக்கத்தை நீங்கள் தடுக்க, தடுக்க அவனுக்குள் விடையளிக்கப்படாத கேள்விகள் மற்றும் தெளிவுகள் அற்ற நிலை அவனை கடவுள

மறுப்பு கொள்கையின் பக்கமே கொண்டு செல்லும். அவனுக்கு நன்மை செய்கிறேன் என்று நினைத்து அவனுக்கு மேலும் மேலும் தீமைகளைத்தான் செய்கிறீர்கள். டெக்னாலஜி வளர்ந்து வருகிற இந்த கால கட்டத்தில மிக குறுகிய காலத்திலேயே அவன் உண்மையை உணர்ந்து கொள்வான் என்றேன். இதற்க்கிடையில் விடைபெறுமுன் அந்த பையனிடம் நான் கொடுத்த அந்த புத்தகத்தை - **One God? or Many gods** படித்துப் பார், உன்னுடைய தேடுதலுக்கு விடை சொல்லும் என்றதும், **sure uncle** என்றவனாக விடை பெற்றான் விஷ்ணுவர்த்தன்!

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

9. ஒண்ணுமே விளங்காத, படிக்கவே தெரியாத, வயதானவரிகளின் நிலை என்ன? அவர்களுக்கு இஸ்லாமிய கொள்கை அதாவது ஓரிறைக் கொள்கை எப்படி போய்ச் சேரும் - **அரவிந்தின் ஆதங்க கேள்வி!**



மிக, மிக விரிவாக இஸ்லாத்தை ஓரிறைக் கொள்கையை, அதை தொடர்ந்து **சொர்க்கம்** செல்ல படைத்த அந்த **ஒரே இறைவனை மட்டுமே கலப்படமில்லாமல் வணங்கப்படுவதையே** குறைந்த பட்ச அளவுகோலாக இறைவன் வைத்திருக்கிறான் என்பது பற்றி நாம் விளக்குவதை மிக ஆழமாகவும் அக்கறையுடனும் கேட்டுக் கொண்டிருந்த **அரவிந்த்,** சார், இவ்வளவு தெளிவாக, இவ்வளவு நேரம் செலவழித்து நீங்கள் விளக்குவதை நிரம்ப படித்த, ஆராய்ச்சி மனப்பான்மையுடனும், தேடுதலுடனும் இருக்கும் எங்களுக்கு புரிகிறது. ஆனால் இவ்வளவு **ஆழமாக விளங்க முடியாத, படிக்கவே தெரியாத, வயதானவர்களின் நிலை என்ன?** என்று உண்மையான ஆதங்கத்துடன் கேள்வியை முன் வைத்தார் அரவிந்த்!


குடிசையில் இருந்தாலும், கோபுரத்தில் இருந்தாலும், மெத்த படித்திருந்தாலும், பாமரனாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் **ஓரிறைக் கொள்கை** போய் சேராமல் அவர்கள் யாரும் மரணிப்பதில்லை. அது படைத்தவனின் வாக்குறுதி. அவரவர்கள் தன்மை மற்றும் நிலைக்கேற்ப எந்த விதத்திலாவது அவர்களுக்கு இறைவனைப் பற்றிய செய்தியை கொண்டு போய்ச் சேர்ப்பது படைத்தவனின் வேலை. அது சென்று சேராமல் அவர்கள் யாரும் மரணிப்பதில்லை. சும்மா! ஒரு டெஸ்ட்டுக்காக அறவே படிக்காத ஒரு பாமர, வயதான ஆணோ, பெண்ணோ அவர்களிடம் போய் நம்

அனைவரையும் படைத்தது ஒரே கடவுளா? இல்லை வேறு, வேறா? என்று கேட்டு பாருங்கள்! **ஒரே கடவுள்தான்** என்று ஆணித்தரமாக சொல்வார்கள். **சொல்வதை செயலில் காட்டி நிலைத்து நிற்கிறார்களா? என்பதே அவர்களுக்கும், உங்களுக்குமான கேள்வி?** என்றவுடன், புரியுது சார் என்றார் அரவிந்த். என்னுடைய மற்றும் எங்களுடைய கேள்விகளுக்கு தெளிவான பதிலளித்தீர்கள், கண்டிப்பான உண்மையின் பக்கம் நாங்கள் அதிசீக்கிரம் வருவோம் என்றவாறே விடைபெற்றனர் அரவிந்தும் அவருடைய நண்பர்களும்...

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

10. சர்ச்சில் வைக்கப்பட்டிருந்த இஸ்லாமிய புத்தகமும், கண்டெடுத்த சுசீலாவும்...



ஏர்போர்ட்டிலிருந்து நண்பருடன் திரும்பி கொண்டிருந்த நேரத்தில் நமக்கு ஒரு போன் கால்!

சார்! மாஸ் பவுண்டேஷனா? ஆமாம் மேடம், சொல்லுங்க... ஒரு புக்குல உங்க நம்பர பார்த்தேன். ஓகே மேடம், எந்த புக்? **இயேசு (அலை) மோரி (அலை) பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள உண்மைகள்** ஓகே மேடம், சொல்லுங்க! எனக்கு ஒரு குர்ஆன் வேணும். ஓகே மேடம் கொடுததிடலாமே என்றவாறே, நீங்க எங்கிருக்கிறீங்க? என்று கேட்க அயனாவரத்தில வாட்டர் டேங்க் எதிர்த்தாப்ல என்று சொல்ல ஓகே மேடம், உங்க அட்ரஸ அனுப்புங்க, கொண்டு வந்து தருகிறோம் என்று சொல்லியவாறு பேச்சு முடிவுற்றது.

நேற்று குர்ஆனை எடுத்துக் கொண்டு அவரை தொடர்பு கொண்டு கொடுக்கலாம் என்று சென்ற பொழுது அவரிடம் எதேச்சையாக உங்களுக்கு அந்த புக் **(இயேசு (அலை), மோரி (அலை) பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள உண்மைகள்)** எங்கே கிடைத்தது? அப்படின்னு கேட்க, அவர் சொன்ன விஷயம் நமக்கு ஆச்சரியப்படுத்தியது. நான் வழக்கமாக **எக்மோரில்** இருக்கக்கூடிய ஒரு **சர்ச்சுக்கு** தான் போவேன் அந்த **சர்ச்சில்** இந்த **புத்தகம்** மற்ற புத்தகங்களோடு வைக்கப்பட்டிருந்தது என் கண்ணில் பட்டது நான் அதை எடுத்துக் கொண்டு வந்தேன். பொதுவாக நாங்கள் அங்கே உட்கார்ந்துதான் படிப்போம். சில நேரங்களில் தேவைப்பட்டால் நாங்கள் எடுத்துக் கொண்டு செல்லலாம் என்ற அடிப்படையில் நான் அந்த புக்கை எடுத்துக் கொண்டு வந்தேன் என்று சொன்னது நம்மை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது.

நம்முடைய நினைவு பின்னோக்கி சென்றது எப்படி

அந்த **சர்ச்சுக்கு இந்த புக்** போயிருக்கும்? என்று நினைத்துக் கொண்டிருக்கையில் கடந்த அக்டோபர் மாதக் கடைசியில் **எக்மோர் சமுதாயக் கூடத்தில்** ஒரு **வாழ்வியல் கண்காட்சி** நடந்தது. அங்கே அந்த கண்காட்சி நடத்தப்பட்ட இடத்திற்கு எதிரே ஒரு சர்ச் இருந்தது. அந்த **சர்ச்சில்** உள்ள **பாஸ்டர்ஸ், ஃபாதர்ஸ் மற்றும் அட்மினிஸ்ட்ரேஷன்** உள்ள எல்லாரையும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் வந்து உள்ளே சுற்றி பார்த்துவிட்டு அங்கே கொடுக்கப்பட்ட புத்தகங்களை எடுத்துக்கொண்டு வெளியே செல்லும் பொழுது எதைச்சையாக நாம் அவர்களை வாசலில் எதிர் கொண்டு நம் கைவசம் வைத்திருந்த இந்த **(இயேசு (அலை), மேரி (அலை) பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள உண்மைகள்)** புத்தகத்தை ஆளுக்கு ஒன்றாக கொடுத்தோம். ஆக, அந்த புத்தகம் தான் அந்த சர்ச்சில் வைக்கப்பட்டிருந்தது என்று நினைக்கும் பொழுது அல்லாஹ்வுக்கே நாம் நன்றி செலுத்தினோம்.

அந்த ஒரு புக்கின் மூலமாக **சுசீலாவுக்கு இன்று குர்ஆனை** படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுத்தியது; **இரண்டாவது,** நாம் **நேரடியாகவே இந்த புத்தகத்தை ஒவ்வொரு சர்ச்சிலும் கொடுக்கலாம்** என்ற எண்ணமும் நமக்கு ஏற்படுகிறது **இன்ஷா அல்லாஹ்!** அல்லாஹ் அதற்க்கு அருள் புரிவானாக!


அந்த புத்தகத்தை வைத்த **சர்ச் நிர்வாகிகளுக்கும், சுசீலாவுக்கும்** மற்றும் அவரை சார்ந்த மக்களுக்கும் **அல்லாஹ் ஹிதாயத்தை வழங்குவானாக!**

(சகோதரர்களே! உங்கள் கிறிஸ்துவ நண்பர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கவும், அல்லாஹ் நாடினால் அவர்கள் நேர்வழி பெறவும் உதவும் அருமையான புத்தகம்!)

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் பெங்கால் மொழிகளில்....)

◆◈◈◈◆

11. ஒரு தெய்வமா? பல தெய்வமா? 50 புத்தகம் வேணும் சார்! ஆர்டர் போட்ட புரபசர் பத்மநாபன்



பாண்டிச்சேரியில் மதிய நேரம் சிறிது கண் அயர நினைக்கையில் போன் அலற, மறுமுனையில் சார்! மாஸ் **பவுண்டேஷனா?** என்றது ஒரு குரல்! ஆமாம் சார், சொல்லுங்க... அது வந்து கடந்த வாரம் தீவுத்திடலில் பொருட்காட்சிக்கு போயிருந்தோம். ஓகே சார்! அப்போது எனக்கு குர்ஆன் ஒன்று அன்பளிப்பாக கொடுத்தார்கள். அதோட சேர்ந்து ஒரு புக் ஒன்னு கொடுத்தாங்க சார்! **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** அப்படின்னு, அதை நான் வந்து படிச்சு பார்த்தேன் சார்! ரொம்ப இம்ப்ரஸிவ் ஆயிட்டேன் சார் எவ்வளவு தெளிவாக கடவுள் கொள்கையை விளக்கி இருக்காங்க, அப்படின்னு பார்க்கும்போது ரொம்ப நெகிழ்ந்து போயிட்டேன் சார்! என்று அந்த புத்தகம் ஏற்படுத்திய கருத்து தாக்கத்தை அவரின் குரலில் தெரிய முழிந்தது.

எனக்கு ஒரு ரிக்வெஸ்ட் இருக்கு சார்! என்ன சார் சொல்லுங்க! எனக்கு ஒரு **50 புத்தகம் உங்க பவுண்டேஷன்ல இருந்து அன்பளிப்பாக கிடைக்குமா?** சார்? **என்னுடைய உறவினர்களுக்கு எல்லாருக்கும் கொடுக்கணும்னு** நினைக்கிறேன் சார்! நான் வந்து ஒரு ப்ரொபசர்! ரிட்டயர் ஆயிட்டேன் எனக்கு வயசு 71 வயசு ஆகுது எனக்கு சொந்த ஊர் திருச்செந்தூர் பக்கத்துல, ஆனா மதுரையிலே நான் யாதவா காலேஜ்ல வொர்க் பண்ணி அங்கே செட்டில் ஆயிட்டேன் சார்! எனக்கு வீடு எல்லாம் அங்கதான் இருக்குது சென்னையில என் மகள் வீட்டில் தற்சமயம் இருக்கிறேன். மாதம் ஒருமுறை மதுரைக்கு சென்று வருவேன்.

அந்த புக்கோட தாக்கம் எல்லாருக்கும் இந்த உண்மை போய் சேரனும் அப்படின்னு நான் நினைக்கிறேன் சார்!. தர முடியுமா சார்? அத்தோடு சேர்ந்து எனக்கு **உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?** அப்படின்னு ஒரு **QR Code** பின்னாடி போட்டு இருக்கு சார்! **அந்த புத்தகமும் ஒரு 50 வேண்டும்** கொஞ்சம் கொடுக்க முடியுமா சார்! என்றார் புரபசர் பத்மநாபன். ஓகே சார் ஒன்றும் பிரச்சனை இல்ல! நீங்க எங்க இருக்கீங்க சென்னைல? நான் முகப்பேர்ல இருக்கிறேன் சார்! ஓகே நீங்க உங்க அட்ரஸ் மேலும் மற்ற விபரங்களை வாட்ஸப்ல அனுப்பி வைங்க! உங்களுக்கு தேவையான புதகங்களை கொண்டு வந்து நேரில் கொடுக்கிறோம் என்று சொல்ல பேச்சு முடிவுற்றது. தாமதிக்காமல் வாட்ஸப்பில் மெஸேஜ்ம் உடனே வந்து சேர்ந்தது.

மூன்று நாள் கழித்து புரபசர் கேட்ட புத்தகங்களுடன் அவரை சந்திக்கச் சென்றோம். மிகவும் சந்தோஷமடைந்தார். அல்லாஹ்வுடைய கட்டளைகளை தெரிந்து கொள்ள ஆர்வபட்டு சிறிய புத்தகங்கள் கேட்டதால் திருக்குர்ஆன் நற்செய்தி மலர் நான்கு மாத இதழ்களையும் கொடுத்தோம். நெடுநேரம் கருத்து பரிமாற்றத்திற்க்குப் பிறகு அவர் வாங்கிச் சென்ற குர்ஆனின் பக்கம் பேச்சு திரும்பியது. தலைப்பு, பக்கங்கள், அத்தியாயம், கருத்துரை ஆகியவற்றைக் கொண்டு படிக்கும் முறைகளை அவருக்கு சொல்லிக் கொடுததோம். படிக்கும் பொழுது ஏற்படும் கேள்விகளுக்கு கண்டிப்பாக தொடர்பு கொள்வேன் என்றார். கொடுத்து உதவிய புத்தகங்களை குடும்பத்தார்களுக்கு கொண்டு சேர்ப்பதாக உறுதியளித்தார். நாமும் விடை பெற்றவராக நடையை கட்டினோம்.

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

12. ஆட்டோவில் கண்ட ஹதீஸின் வாசகமும், சாந்தியின் கண்ணீரும்....



"இலவச குர்ஆன்" வாசகத்தை கேட்டு நம் முன் நின்றார் சுமார் 45 வயது சாந்தி! என்ன குர்ஆனை தேடுறீங்களா? என்றதும், இல்லைங்க, ஆட்டோவில இருந்த **முஹம்மது நபியின்** அந்த வாசகத்தை பார்த்ததும் நான் கண்ணீர்விட்டு அழுதேன் என்றார்; எந்த வாசகம்? என்று நாம் கேட்டதும்;

"அனாதை குழத்தையின் முன்பு உங்கள் குழந்தைகளை கொஞ்சாதீர்கள்" - முஹம்மது நபி என்றார். அவர் அந்த ஹதீஸை சொல்லிய விதம், நம் கண்ணும் பனித்தது. அது மட்டுமா?,

"அண்டை வீட்டுகாரர் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவர் நம்மை சார்ந்தவரல்லர்" - முஹம்மது நபி.

"வேலையாளரின் வியர்வை உலரும் முன் அவருக்கான கூலியை கொடுத்து விடுங்கள்" - முஹம்மது நபி

இந்த **வசனங்களை** எல்லாம் **ஆட்டோவில்** படிக்கும் பொழுது மனதில் இனம்புரியாத ஒரு தாக்கம் ஏற்பட்டது என்று தன்னிலை விளக்கம் கொடுத்தார் சாந்தி!

நீங்கள் சொன்ன பொன்மொழிகளை நமக்கு தந்த முஹம்மது நபிக்கு **இறைவன் அருளியதே இந்த குர்ஆன்** என்றதும் அப்படியா? என்றார் ஆச்சரியமாக!

சில பொன் மொழிகளே உங்களுக்கு இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் இந்த குர்ஆன் எத்தகைய தாக்கத்தை

ஏற்படுத்தும் என்றதும், கொடுங்க! கொடுங்க! நான் படிச்சு பார்க்கிறேன் என்றார்!

நான் தர்ஹாவுக்கு எல்லாம் போவேன் என்றவரிடம், தர்ஹா தோன்றிய விதத்தையும், தர்ஹாவுக்கும், இஸ்லாத்தின் அன்றாட வழிபாட்டிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், ஓர் இறைக் கொள்கையின் முக்கியத்துவத்தையும், அதை நாம் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் விளக்க, விளக்க ஆர்வமுடன் பல கேள்விகளை முன் வைத்து விளக்கம் கேட்டு கொண்டிருந்தார். இவ்வளவு தெளிவுகள் இருக்கிறதா? என்ற கேட்டவாறே, நிறைய நேரம் செலவிட்டு பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார்.

முடிவாக, நாம் **குர்ஆன் மொழி பெயர்ப்புடன், ஒரு தெய்வமா, பல தெய்வமா? மற்றும் உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?** புத்தகங்களுடன், நம் போன் நம்பரையும் கொடுத்து, மேலதிகமாக எந்த விளக்கமாயினும் தொடர்பு கொள்ளுமாறு சொல்லி அனுப்பி வைத்தோம்.

நிறைய விஷயங்களை தெரிந்து கொள்ள இன்று ஒரு வாய்ப்பு கிடைத்தது என்றவாறே விடைபெற்றார் சாந்தி! இப்பெண்மணிக்கு **நேர்வழி காட்டிடு** இறைவா! இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தியவர்களுக்கும், குறிப்பாக **ஆட்டோ** வாசகத்தை தொடங்கியவர்களுக்கும், அதை முன்னெடுத்து தொடர்ச்சியாக கொண்டு செய்பவர்களுக்கும் **நீ அருள்புரி இறைவா!**

சகோதரர்களே! எண்ணற்ற சாந்திக்கள் நம்மைச்சுற்றி... முன்வாருங்கள், விளக்கமளியுங்கள். நேர்வழி பெற்றிட ஒரு உந்து சக்தியாக திகழுங்கள்...

அனைவருக்கும் பணி செய்ய இலகுவாக்கிவை யா அல்லாஹ்!

◆◈◈◈◆

13. ரேஷன் கடை சரவணனின் குர்ஆன் தேடல்



நிவாரண கேம்ப் ஒன்று ரேஷன் கடை முன்னால் நடக்க, நம் ஸ்கூட்டர் எதேச்சையாக கடை முன்னால் நிற்க அதிலிருந்த **"குரான் அன்பளிப்பாக"** பெற இந்த நம்பரை தொடர்பு கொள்ளவும், என்ற ஸ்டிக்கரை பார்த்து **சார்! குர்ஆன் கிடைக்குமா சார்?** என்று ஒருவர் விளிக்க ஆமா சார், இந்த நம்பருக்கு நீங்க உங்க அட்ரஸ்டன் வாட்ஸப் மெஸேஜ் அனுப்புனீங்கன்னா, அவங்க உங்களுக்கு **குர்ஆன்** அனுப்பி வைப்பாங்க என்று நாம் சொல்ல, அவர் தூரத்திலிருந்தவாறே நம்பரை நோட் பண்ண ஆரம்பித்தார்.

என்ன சார்! **குர்ஆன் படிக்கணும்** என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது சார்? என்று வழக்கம்போல எதார்த்தமாக நாம் கேட்க, இல்ல சார், **ஜீசஸ் பத்தி குர்ஆன்ல சொல்லி** இருக்கு அப்படின்னு நண்பர் ஒருவர் சொன்னாரு, அதான் அதைப்பற்றி தெரிஞ்சுக்கலாமேன்னு... அப்படின்னு அவர் சொல்ல, உடனே, "அப்ப நீங்க கிறிஸ்டியனா சார்" என்று நாம் அவரை கேட்டோம். ஆமாம் என்றார். உண்மைதான் சார் **ஜீசஸ் (அலை) பற்றியும் மோரி (அலை) பற்றியும் குர்ஆன்ல** வந்து ரொம்ப தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றோம்.

நாளைக்கு நீங்கள் இதே இடத்தில இருப்பீர்களா சார்?, இருந்தா நான் உங்களுக்கு **"ஜீசஸ் மற்றும் மோரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்"** என்ற புத்தகத்தை கொண்டு வந்து தருகிறேன், அந்த புத்தகத்துல உங்களுக்கு குர்ஆன்ல என்ன எல்லாம் அவர்களைப்பற்றி வசனங்கள் இருக்குதோ அந்த வசனங்களை மட்டுமே தனியாக

கிறிஸ்தவர்கள் அவசியம் அறிய வேண்டிய உண்மைகள் என்று அதுல தொகுக்கப்பட்டிருக்கிறது; உங்களுக்கு அது ரொம்ப இன்னும் உதவியா இருக்கும் சார், என்று சொல்ல, கண்டிப்பா கொண்டு வாங்க சார் நான் இங்கதான் இருப்பேன் என்றவாறே, தன் பெயர் சரவணன் என்றார். (சரவணன் என்று பெயர் வைத்திருந்ததால்... அவர் இந்துவிலிருந்து கிறிஸ்துவராக மாறி இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது).

மறுநாள் அதேபோல அவர் சொன்ன நேரத்துக்கு நம்ம கொண்டுவந்து **ஜீசஸ் மோரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்** என்ற புத்தகத்தை அவரிடம் கொடுத்தோம். சார், நீங்க படிங்க, மேல் அதிகமாக உங்களுக்கு எதுவும் விளக்கம் தேவைன்னா இதுல நம்ம நம்பர் இருக்குது நீங்க அந்த நம்பருக்கு போன் பண்ணுங்க என்று சொல்லிவிட்டு நாம் நடையை கட்டினோம். அவர் பக்கத்தில் மற்றொருவர் அமர்ந்திருந்ததால் அவருக்கு **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** புத்தகத்தை அன்பளிப்பாக கொடுத்துவிட்டு நான் வண்டியை ஸ்டார்ட் பண்ணும் பொழுது கவனித்தேன். சரவணன் உடனே அந்த புத்தகத்தைப் பிரித்து படிக்க ஆரம்பித்தது கண்டு "அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டுவானாக" என்று பிரார்த்தித்தவனாக அங்கிருந்து நடையை கட்டினோம்.

ஒரு சாதாரண **ஸ்கூட்டர் ஸ்டிக்கர்** எப்படி ஒருவரு (சரவணனு)க்கு உண்மையை உணர வழி காட்டுகிறதோ, அதே மாதிரி **அன்றாட வாழ்வில் நிறைய சரவணன்கள்** நம்மை சுற்றி, அவர்களுக்கும் விடை அளிக்க ஏதுவானதாக நம்மை நாமே தாவாவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உண்மை இங்கே புலப்படுகிறது சகோதரர்களே!

முன் வாருங்கள்! **இறைச் செய்தியை** மக்களிடம் கொண்டு போய் சேர்க்க ஒரு உந்து சக்தியாக செயல்படுங்கள். அருள்புரி இறைவா...

◆◈◈◈◆

14. "சந்துரு" உருவில் ரயிலில் வந்த "கடவுள் மறுப்புக் கொள்கை"



எதிர்த்த சீட்டுல 26 வயது **சந்துரு** (இருவருக்கும் RAC) எதிர் எதிராக அமர்ந்திருக்க, அவரைப் பார்க்க அடுத்த பெட்டியிலிருந்து வந்து சேர்ந்தார் அவருடைய நண்பர் கணேஷ். இருவரும் தங்களுக்குள்ள உறவாடியவாறே, கணேஷ், சந்துருவை அவர் பெட்டியில் ஒரு இடம் இருப்பதாக சொல்லி அழைத்துக் கொண்டிருந்தார். இருவரும் இளைஞராக இருந்ததினாலும் மேலும் அடுத்த பெட்டிக்கு போக இருந்ததினாலும், நாம் சுதாரித்தவாறே கையில் இருந்த **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** புத்தகத்தின் **QR Code** அட்டையை காட்டி நேரம் கிடைக்கும் போது இந்த புத்தகத்தை ஸ்கேன் செய்து படித்து பாருங்கள். **கடவுள் கொள்கையில் தெளிவு பிறக்கும்** என்று கூற, சந்துரு கையில் வாங்கியவாறே, சார் எனக்கு **கடவுள் நம்பிக்கை இல்லை** சார், என்று கூற, உடனே நாம், அப்ப நீங்கள **ரொம்ப இண்டலிஜென்ட்டான ஆள்** என்று பீடிகை போட்டவாறே, உங்களுக்காகவே நம்மிடம் ஒரு புக் உள்ளது என்றவாறே **"இறைவன் இருக்கின்றானா? நேரில் காட்சி தருவானா?"** என்ற **புத்தகத்தின் pdf file** ஐ அவரிடம் காட்ட எனக்கு அனுப்பி வைங்க சார் என்றவாறே தன்னுடைய போன் நம்பரை நம்மிடம் கொடுத்தார். அவருக்கு அதை அனுப்பியவாறே பேச்சுக் கொடுத்தோம்.

ஒருவருக்கு தொடர்ச்சியாக ஏற்படும் பலவிதமான உலகம் மற்றும் கடவுள் சம்பந்தமான கேள்விகளுக்கு தெளிவான மற்றும் ஆதாரப்பூர்வமான விடை கிடைக்காததின்

விளைவே ஒருவர் கடவுள் மறுப்பு கொள்கையின் பக்கம் சென்றுவிடுகிறார் என்றதும், எப்படி சார் **கரெக்டா பாயின்ட் புடிச்சி பேசுறீங்க** என்றார் சந்துரு.

அதுமட்டுமல்ல, உங்களுக்கு **குர்ஆன் மட்டும்தான்** உங்க கேள்விக்கு, சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும் என்று பேசிக்கொண்டிருக்கும் போதே, சார் அதை படிக்கணும்னு தேடிக்கிட்டு இருக்கிறேன் சார், கிடைக்குமா? என்றார் அவசரத்துடன்; நாம் உடனே, இருங்க, கடவுள் மறுப்பாளர்களுக்கு ஏன் குர்ஆன்தான் விடையளிக்கும் என்று சொன்னோம் என்றால், குர்ஆன் இறங்கிய காலத்தில் (சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்னால்) **ஆறு விதமான** மக்கள் அந்த இடத்திலே (இன்றைய சவுதியில்) வாழ்ந்திருக்கிறார்கள். முறையே;

1) **யூதர்களும்**
2) **கிறிஸ்தவர்களும்** கடைசி தூதரை எதிர்பார்த்து அங்கு வசிக்கிறார்கள்
3) **நெருப்பை** கடவுளாக வணங்க கூடியவர்கள் அங்கே இருக்கிறார்கள்
4) **பல விக்கிரகங்களை** கடவுளாக வணங்கக்கூடிய மக்கள் அங்கே இருக்கிறார்கள்
5) **கடவுளே இல்லை** என்று சொல்லக்கூடிய மக்களும் அங்கே இருக்கிறார்கள்
6) **ஒரே இறைவனை** வணங்கக்கூடிய மக்களும் அங்கிருக்கிறார்கள்.

இந்த **ஆறு விதமான மக்களுக்கும் "குர்ஆன்"** நேரடியாகவே பதில் சொல்லும் ஆகவே உங்களுடைய பிரச்சனைக்கு அதாவது கடவுள் மறுப்பு கொள்கைக்கு நீங்கள் குர்ஆனை படித்தாலே அதனுடைய **அத்தாட்சிகள் உங்களுக்கு 'இறைவன் ஒருவன் இருக்கிறான்'** என்பதை தெளிவாக விளக்கி விடும் ஆகவே நீங்கள் குர்ஆனை படியுங்கள் என்றோம்.

இப்ப நீங்க கேட்ட குர்ஆன் உங்களுக்கு வேண்டும் என்றால் நீங்கள் சென்னையில் நடக்கக்கூடிய தீவுத்திடல் பொருட்காட்சிக்கு வந்தீங்கன்னா அங்க உங்களுக்கு நீங்கள் தேடும் குர்ஆன் இலவசமாக கிடைக்கும் நீங்கள் வந்து வாங்கிக் கொள்ளலாம், என்றதும் அப்படியா சார், கண்டிப்பா நான் அங்கு வந்து வாங்கிக்கிறேன் சார் உங்களுடைய இந்த விளக்கத்திற்கும் இந்த குர்ஆன் எனக்கு படிக்க கிடைக்க நீங்க சொன்ன அந்த வழிக்கும் மிக்க நன்றி சார் என்றவாறு விடை பெற்றார் சந்துரு!

இறைவா சந்துருவுக்கு நேர்வழி காட்டு!

எண்ணற்ற சந்துருக்கள் நம்மிடையே வெளியே சொல்லாமல் உலக வாழ்வின் அர்த்தத்தை தேடி உலவுகிறார்கள். அவர்களுக்கு எடுத்துச் சொல்வது நம் கடமை என்பதை உணர்ந்தவர்களாக நாம் தாஃவாவை முன்னெடுக்க வேண்டும் சகோதரர்களே!

யாருக்காகவும் காத்திராமல், உங்களை அன்றாடம் சந்திக்கும் மக்களிடையே உரையாடி அவர்களுக்கு தெளிவு கிடைக்க முன் வருவோமா!

◆◈◈◈◆

15. ஷாலினி தேடிய மலையாள குர்ஆன்



எனக்கு ஒரு தமிழ் குர்ஆனும், என்னுடைய அம்மாவுக்கு ஒரு மலையாள குர்ஆனும் கொடுங்க என்று கேட்டவராக நம்மிடம் வந்த ஷாலினி தமிழ் நான் படிச்சிடுவேன் எங்க அம்மாவுக்கு வந்து மலையாளம் கண்டிப்பாக தேவை அப்படின்னு கேட்டவர் என்னுடன் நிறைய முஸ்லிம் பெண்கள் படித்தார்கள் என்றும் தான் தற்போது ஏர்போர்ட்டில் பணிபுரிவதாகவும் தான் வாழ்ந்த கேரளாவில் நிறைய முஸ்லிம் குடும்பத்தாரோடு தாங்கள் சேர்ந்து வாழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் கிறிஸ்தவராக இருந்ததினால் உங்களுக்கும், எங்களுக்கும் அதாலது கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் என்ன தொடர்பு என்று உங்களுக்கு தெரியுமா? அப்படின்னு நாம் கேட்க, 'லைட்டா தெரியும்' அப்படின்னு சொன்னார்

அவருக்கு நாம் உடனே ஆபிரகாமுக்கு இரண்டு மக்கள் அதில் ஈசாக்கோட வழித்தோன்றல் தான் மோசஸ்சும், ஜீஸஸும் **இஸ்மாவேலுடைய வழித்தோன்றல்தான் முஹம்மது நபி** என்று சொல்ல, 'ஆமாம்' இதை கேள்விப்பட்டிருக்கிறேன் என்றார். புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் கடைசி இறைத்தூதர் இஸ்மவேல் சமூகத்தில் தோன்றுவார் என்பதை முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது அதை முழுமைப்படுத்த, இறைவனால் அனுப்பப்பட்ட **கடைசி தூதர் தான் "முஹம்மது நபி",** அவர்களுடைய 23 ஆண்டு வருட ஆண்டு கால வாழ்க்கையில் இறைவன் **இறைவேதமாக அருளியது தான் இந்த 'குர்ஆன்'** என்று அவருக்கு சொன்னதும், ரொம்ப ஆச்சரியப்பட்டார் பிறகு

அவரிடம் நாம் இயேசுவைப் பற்றியும், மேரியைப் பற்றியும் இந்த குர்ஆனில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது என்றவுடன் **"உண்மையாகவா"? இயேசு பற்றி இதில் இருக்கிறதா?** அப்படியா? என்று அவர் ஆர்வமுடன் வினவ? நான் **இதை எதிர்பார்க்கவே இல்லை** என்றார் மேலதிகமாக!

எங்களுக்கு இயேசு பற்றியும் அவருடைய தாயார் மேரி பற்றியும் எதுவுமே தெரியாது, எக்ஸப்ட் (except) குர்ஆன்ல இறைவன் எங்களுக்கு (எது மட்டும் தெரிந்தால் போதும் என்பதை) சொல்லித் தந்ததை தவிர, என்றோம். **"கடவுள் மூவர்" என்று செல்லாதீர்கள்** என்று கிறிஸ்தவர்களை **குர்ஆன் எச்சரிக்கிறது** என்பதையும் எடுத்துரைத்தோம்.


உங்களைப் போல கிறிஸ்தவர்களுக்கு இலகுவாக இருக்க வேண்டும் என்பதற்காக இயேசு, மேரி பற்றி குர்ஆனில் குறிப்பிடப்படும் வசனங்களை மட்டும் தனியாக எடுத்து **இயேசு மற்றும் மேரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்** என்று ஒரு புத்தகமாக தமிழிலும், ஆங்கிலத்தில் வைத்திருக்கிறோம். நீங்க இதை படிச்சாலே, நீங்கள் இதுவரை நம்பி இருக்கும் **'திரித்து கொள்கை'** தவறு என்பதை எளிதாக விளங்க முடியும் என்றதும், **'ரொம்ப தேங்ஸ் சார், கண்டிப்பாக படிப்பேன்'** என்றவராக புத்தகங்களையும், மலையாள மற்றும் தமிழ் குர்ஆன்களையும் பெற்றவராக விடை பெற்றார்.

ஷாலினிக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும் நேர்வழி காட்டிடு இறைவா! இத்தகு வாய்ப்பிற்க்கு தீவுத்திடலில் வித்திட்ட மக்களுக்கும் அருள்புரி இறைவா! எத்தனை விதமான மக்கள்!, எவ்வளவு ஆர்வத்துடன்! நாம் முன் வராமல், யார்தான் இம்மக்களுக்கு உண்மையை கொண்டு சேர்ப்பார்கள்.... பொடுபோக்காகவே நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு Non Stop Dawa விற்க்காக நாம் அனைவரும் முன் வரவேண்டும் சகோதரர்களே!. அருள்புரி இறைவா!

◆◈◈◈◆

16. அல்லாஹ்வைத் தேடிய 13 வயது விக்ரம்



ஒரு பையன் மற்றும் ஐந்து பெண்களுடன் ஒரு கூட்டம் வந்து எங்களுக்கு 'குர்ஆன் வேணும்' என்று கேட்டார்கள். "குர்ஆனை நீங்க தேடினீங்களா?" அப்படின்னு முன்னாடி இருந்த ஒரு பெண்மணியிடம் கேட்டதற்கு, இல்ல **இவன்தான் 'விக்ரம்', இவனுக்கு புக் படிக்கிற ஆர்வம் ரொம்ப, இவன்தான் "குர்ஆன்" வேணும்னு கேட்டான்** என்று அந்த பெண்மணி சொல்ல அந்த சிறுவனின் தோளில் கைய போட்டு **என்ன தம்பி! குர்ஆனை படிக்கணும்னு ஆர்வம் எப்படி வந்தது? யாரும் உனக்கு சொன்னாங்களா?** அப்படின்னு நாம் கேட்க, உடனே அவன், இல்லை, "அல்லாஹ்வை பத்தி தெரிஞ்சுக்கணும்" என்று உடனடியாக பதில் சொல்ல, வாரி அணைக்க தோன்றியது அவனின் ஆர்வம். அல்ஹம்துலில்லாஹ்!

ரொம்ப சந்தோஷம் இந்த சின்ன வயதிலேயே 'புக் படிப்பது' மிகவும் ஆர்வம் மூட்டக்கூடிய ஒரு செயல், என்று அவனுக்கு நாம் வாழ்த்து சொல்லி, முதல்ல 'விக்ரம்' நீங்க **அல்லாஹ்வை தேடுறதுனால "அல்லாஹ் என்றால் யார்"?** என்று முதலில் சொல்லிடுறேன் என்று சொல்லி நாம் தமிழ்ல எப்படி 'இறைவன்' 'கடவுள்' என்று சொல்கிறோமோ அதே போல ஆங்கிலத்தில் 'God 'என்று சொல்கிறோமோ (அதே போல) குர்ஆனைப் பிரித்து அந்த அரபு மொழியில் கையை வைத்துக் காட்டி, குர்ஆன் இறங்கிய மொழி **"அரபி மொழி"** இந்த அரபி மொழியில் இறைவனை குறிக்கும் சொல்தான் **"அல்லாஹ்"** என்பதாகும்.

சிம்பிளா சொல்லனும்னா, நம் அனைவரையும் படைத்த

ஒரே கடவுளை குறிக்கும் அரபி வார்த்தையே **"அல்லாஹ்"** தவிர **அல்லாஹ்** என்பது தனியான ஒரு கடவுளே அல்லது 'முஸ்லிம்களுடைய கடவுள் அல்ல' என்று நாம் சொன்னதும் அந்தப் பையன் மிகவும் ஆச்சரியமடைந்தவனாக **'அப்படியா'** என்றவாறே அவன் முகம் பிரகாசித்ததை மறக்கமுடியாது.

மேலும் உலகலாவிய முறையில் ஒரே இறைவனை வணங்குபவர்கள் (அவர்கள் எந்த மொழி பேசுபவர்கள் இருந்தாலும்) அனைவரும் **"அல்லாஹ்"** என்ற அரபி வார்த்தையையே ஏன் ஒருமித்த நிலையில் உபயோகப்படுத்தைகிறார்கள் என்றால் அந்த வார்த்தை மப்டும்தான் ஒரே கடவுளை ஞாபகபடுத்தும். வேற எந்த மொழி வார்த்தைக்கும் அந்த தன்மை கிடையாது என்று விளக்கினோம்.

உதாரணமாக, இப்ப நீங்க இந்த பொருட்காட்சி கூட்டத்தில் நடுவில் போய் நின்று பையனிடம் மைக்ரோபோனை கொடுத்து **"கடவுளே"** என்று சத்தமாக சொல்லச் சொன்னால், கூப்பிட்டால், எல்லாரும் சத்தத்தை கேட்டு திரும்பி பார்ப்பாங்க ஆனா அவங்க அவங்க பெற்றோர் சொல்லித்தந்த கடவுள் தான் அவர்கள் மனதில் ஞாபகம் வரும்.

இதே மாதிரி நீங்கள் **Oh God** அப்படின்னு ஆங்கிலத்தில் சத்தம் போட்டு அதே மைக்ரோ போன்ல சொன்னாலும் எல்லாரும் திரும்பி பார்ப்பாங்க, ஆனா எல்லாரும் மனதிலேயும் அவரவர்கள் பெற்றோர் சொல்லித்தந்த கடவுள் தான் ஞாபகம் வருமே தவிர ஒரே இறைவன் ஞாபகம் வராது.

ஆனால் நீங்கள் அங்க போய் நின்றுகிட்டு **அல்லாஹ்** என்று சத்தமா சொன்னீங்கன்னா முதல்ல எல்லோர் மனதிலும் என்ன வராதுன்னு சொன்னா **உருவம் வராது** அமெரிக்காவில இருக்கிறவன் **அல்லாஹ்**-ன்னு சொன்னாலும் அது ஒரே இறைவன் தான் அயனாவரத்தில் இருக்கிறவன் **அல்லாஹ்**-ன்னு சொன்னாலும் அது ஒரே இறைவன்தான். அதனாலதான் உலகம் முழுமையும் ஓரே இறைக் கொள்கையை பின்பற்றுபவர்கள் **அல்லாஹ்** என்ற

அந்த வார்த்தையை உபயோகப்படுத்துவதை காணலாம் அப்படி நாம் சொன்னதும் பையனுக்கும் அவர்கள் சார்ந்த அந்த குடும்பத்தினரும் **'எளிதில் புரியும்படி விளக்கிவிட்டீர்களே'** என்று மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

உடனே அவர்களுக்கு மேல் அதிகமாக சில விளக்கங்களை சொல்லி நாம் அவர்களை அனுப்பி வைத்தோம் விக்ரமிற்க்கு ஆங்கில குர்ஆனும், **"One God? or Many gods?"** என்ற புத்தகமும், கூடுதலாக விக்ரமின் அம்மாவிற்கு தமிழ் **குர்ஆனும் "ஒரு தெய்வமா? பல தெய்வமா?"** என்ற புக்கையும் கொடுத்து அனுப்பி வைத்தோம். போகும்போது, உங்க பையன் 'படிப்பாளி' என்று நீங்கள் சொன்னீர்கள். அவன் அதிசீக்கிரத்தில் உண்மையை கண்டுபிடித்துவிடுவான், அவன் சொல்வதை கேட்டு பின்பற்றுங்கள் அப்படின்னு சொல்லி அவர்களை அனுப்பி வைத்தோம்.

அவர்கள் உடன் வந்த ஐந்து பெண்மணிகளில் மூன்று பெண்மணிகள் பக்கத்து வீட்டில் வசிக்கும் கிறிஸ்தவர்களாக இருந்ததாகசொன்னார்கள். அவர்கள்சிறிதுஇடைவெளிவிட்டவர்களாக தனியே நிற்பது கண்டு உடனே அவர்களை கூப்பிட்டு அவர்களுக்கு **இயேசு மற்றும் மேரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்** என்ற புத்தகத்தை கையில் கொடுத்து நீங்கள் புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் சில செய்திகளை, கடவுள் கொள்கை பற்றி அறிந்து இருப்பீர்கள் ஆனால் குர்ஆன் அவைகளை அவற்றின் உண்மைகளை தெளிவாக சில வசனங்களிலேயே குறிப்பிட்டு காட்டுகிறது அதனால நீங்க இதை போய் படிச்சீங்கன்னா உங்களுக்கு உண்மை தெளிவாக விளங்கிவிடும் என்று சொன்னதும் அவர்கள் அதனின் (இயேசு மற்றும் மேரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்) தமிழ் மற்றும் ஆங்கில பதிப்பை வாங்கிக்கொண்டு சென்றார்கள்.

விக்ரம் தேடிய **அல்லாஹ்** வினால், அவனுக்கும், அவனுடைய அம்மாவிற்க்கும், பக்கத்து வீட்டு கிறிஸ்துவ மக்களுக்கும் இறைச் செய்தியை கொண்டு சேர்த்த **அல்லாஹ்வுக்கே** எல்லாப் புகழும்.

அவர்களுக்கு இவைகளை பொருட்காட்சியில் பெற்றிடவும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தவர்களுக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக!

யாஅல்லாஹ்! இம்மக்களுக்கு ஹிதாயத்தைவழாங்கிடுவாயாக

உங்கள் முஹல்லாக்களிலும் **"அல்லாஹ்வைத் தேடும்" விக்ரம்கள்!** அவர்களுக்கு உதவ இதை படிக்கும் நீங்கள்தான் முன் வரவேண்டும் சகோதரர்களே!

◆◈◈◈◆

17. எப்படி சார் அந்த பாய்க்கு மட்டும் இது சாத்தியமாகுது? என்று ஆச்சரியப்பட்ட வினோத்!



குர்ஆன் வேண்டும் என்று வந்த 50 வயது நபரிடம் என்ன சார் குர்ஆன பத்தி எதுவும் தெரியுமா? அப்படி என்று கேட்க, சார்! அதெல்லாம் ஒன்னும் இல்ல **உண்மைய சொல்லனும்னா** நான் இருக்கிற இடத்துல வந்து, நான் ஒரு கிறிஸ்டியன், என் பக்கத்து வீட்டுக்காரர் ஒரு ஹிந்து இருக்கிறார், அடிக்கடி ஏதாவது ஒரு விஷயத்துல சண்டை வந்துகிட்டே இருக்கும் எப்ப சண்டை வந்தாலும் **நாலஞ்சு வீடு தள்ளி இருக்கிற 'பாய்' வந்து சமாதானம் பண்ண வந்துருவாரு**; என்ன சண்டை? யார் பக்கம் ரைட்? அதெல்லாம் பார்க்கமாட்டார், **சண்டைய விடுங்க, விட்டுக் கொடுத்து வாழுங்க, நம்ம எல்லாம் ஒரே ஆட்கள் தான், சகோதரத்துவமாக வாழனும் அப்படின்னு சொல்லி எங்களை சமாதானப்படுத்திட்டே இருப்பார் சார்!.** ஒரு நாள் எனக்கு அளவுக்கதிகமாக கோபம் ஏற்பட சமாதானம் பேச வந்த அவர் கன்னத்திலேயே அடிச்சிட்டேன் சார்! அதுக்குக் கூட திருப்பி என்னை அடிக்காமல் எதுக்கு சார் இதுக்கெல்லாம் அடிக்கிறீங்க? என்று அவர் சமாதானமாகவே பேசியது எனக்கு பின்னால் மிகுந்த வேதனையிலும், சங்கடத்திலும், சொல்லொண்ணா துயரத்திலும் ஆழ்த்தியது.

அவரின் அசாத்திய பொறுமையும், சமாதான உணர்வும், சாந்தமாக போகக்கூடிய தன்மையும் எப்பவுமே எனக்குள் ஆச்சரியம் கலந்த ஆழ்ந்த தாக்கம் ஏற்படுத்திய நிகழ்வாகவே மாறிப்போனது. **எப்படி சார் அந்த "பாய்க்கு" மட்டும் இது சாத்தியமாகுது?** என்ற நினைப்பே **அவர் படிக்கும் குர்ஆனை நாமும் படிக்க வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டால் உங்கள் முன் நிற்கிறேன்**

என்றார்.

பொறுமை, சமாதானம், சகோதரத்துவம், கோபம் கொள்ளாமை, நிலைகுலையாமை போன்ற இந்த நற்பண்புகளெல்லாம் நம்மை படைத்த இறைவன் நம்மை எல்லா நிலைகளிலும் பின்பற்றச் செல்கிற அடிப்படைக் கொள்கை சார்!, அதைத்தான் உங்கள் வீட்டின் அருகிலுள்ள **'பாய்' முழுமனதோடு பின்பற்றுகிறார்.** அவருக்கு இறைவன் நிரம்ப கூலியை தருவானாக! என்று கூறி, குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் சில உதாரணங்களை சொல்லிக் காட்டினோம். நிதானமாக கேட்டுக் கொண்ட அவர், இப்ப கோபம் கொள்வதை குறைத்துக் கொண்டேன் சார்! இந்த குர்ஆனை கண்டிப்பாக படிப்பேன்! என்றார்.

அவர் கிறிஸ்துவராக இருந்ததினால், அவருக்கு மேலதிகமாக **இயேசு, மோரி (அலை) பற்றி விளக்கி, இயேசு, மோரி பற்றி குர்ஆன் கூறும் உண்மைகள்** என்ற புத்தகத்தையும் கொடுத்து படிக்கச் சொல்லி அனுப்பி வைத்தோம்.

அருகில் வசிக்கும் ஒரு இஸ்லாமிய சகோதரரின் பொறுமையும், சமாதான மேம்பாடும் ஒரு சக மனிதரை குர்ஆனின் பக்கம் இழுத்திருக்கிறதே, "அல்லாஹ்" அந்த இஸ்லாமிய சகோதரருக்கும், அவர் படிக்க நினைத்த குர்ஆனை தீவுத்திடலில் கிடைக்கச் செய்வதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து மக்களுக்கும் அல்லாஹ் இரு உலகிலும் பரிபூரண கூலி வழாங்கிடுவானாக!

இதன் மூலம் குரானை தேடும் மக்கள் அதிகரிக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம், கொடுப்பதற்கான வாய்ப்பை நாம் வசிக்கும் இடத்தில், ஊரில் ஏற்படுத்துவோமா!

அது மட்டுமல்லாமல்,

குர்ஆன் கூறும் வாழ்க்கை நாம் வாழ்ந்தால் அதனின்

தாக்கம் நம்மைச் சுற்றி வாழும் மக்களுக்கும் அதனின் பால் ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பதற்க்கு மேற்படி நிகழ்வை ஒரு முன்னுதாரணமாக கொள்வோமாக!

முன் வாருங்கள் சகோதரர்களே! தாவா ஸ்டாலை ஏற்படுத்துங்கள்! **குர்ஆனை தேடும் எத்தனையோ வினோத்களுக்கு** அது உதவலாம் இன்ஷா அல்லாஹ்!



18. பெண் போலீஸ்காரர்களுடன் நடந்த கலந்துரையாடல்



ஆளுக்கு ஒரு கையில் குர்ஆனை வாங்கிக் கொண்டு வந்த பெண் போலீஸ்காரர்கள் எங்களுக்கு எங்க கூடவே பணியாற்றுகிற முஸ்லிம் பிரண்ட்ஸ் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களும் அவ்வப்போது இந்த குர்ஆன்ல உள்ளது பற்றி மேலும் இஸ்லாத்தை பற்றி சிற்சில விஷயங்கள் சொல்லுவாங்க, அதுதான் குர்ஆன் நம்மளும் படிச்சு பார்ப்போமே! அப்படிங்கற ஒரு ஆர்வத்தினால்தான் குர்ஆனை வாங்கினோம் என்றவாறே வந்தவர்கள் மேலதிக விளக்கம் பெற நம்மிடம் அனுப்பி வைக்கப்பட்டதாக சொனனார்கள்.

அவங்களிடம் ரொம்ப சந்தோசம்! உங்களிருவரிடமும் ஒரு சிம்பிள் ஸ்மார்ட் கொஸ்டின் (simple smart question) நம்ம வாழக்கூடிய இந்த சமூகத்துல இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என்று வேறு வேறு சமுதாயத்தவர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் எல்லாரையும் படைத்தது ஒரே கடவுளா? இல்லை வேறு வேறு கடவுளா? அப்படின்னு கேட்டா, உங்களுடைய பதில் என்னவாயிருக்கும்? என்று நாம் வினவ, கேள்வியை முடிக்கும் முன்னரே ரெண்டு பேரும் ஒரு சேர, எல்லாருக்கும் **ஒரே கடவுள்தான்** சார்! என்றார்கள். கேள்வியை நான் முடிக்கும் முன்னாடியே நீங்க **எல்லாருக்கும் ஒரே கடவுள்னு** பட்டுன்னு சொல்லிட்டீங்களே!

அப்படின்னா என்ன அர்த்தம்; **உங்க வாய் ஒரே கடவுள்னு சொல்லுது, உங்க உள்ளம் ஒரே கடவுள்னு ஒத்துக்கொள்கிறது, ஆனா உங்க செயல் மட்டும்...** என்று நாம் இழுத்தவுடன் அது வேற வேறயா தாங்க இருக்குது என்று அவர்களே வார்த்தையை முடித்து வைத்தார்கள்

வாயும், உள்ளமும் மட்டுமல்லாமல் **செயலும் சேர்ந்து ஒரே இறைவனை மனதார வழிபடுபவர்கள்தான் முஸ்லிம்கள்.** அதையொற்றி தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள்தான் முஸ்லிம்கள் என்றதும்...

நாங்க விளங்க வேண்டிய **அதி முக்கியமான ஒரு விஷயத்தை ரொம்ப தெளிவா ஒரு நிமிஷத்துல சொல்லிட்டீங்களே!** என்றார்கள் ஆச்சரியம் மேலிட

மேலதிகமாக பல விளக்கங்களை சொல்லச் சொல்ல பொறுமையுடன் அவர்களிருவரும் கேட்டுக் கொண்டார்கள்.


இறுதியாக விடைபெறுமுன் குர்ஆனுடன் **'ஒரு தெய்வமா? பல தெய்வமா?** என்ற புத்தகத்தையும் கொடுத்து, இந்த புத்தகம் 'concept God' ஐ குர்ஆனின் அடிப்படையில் தெளிவர விளக்கிவிடும். உங்களுக்கு மேற்கொண்டு எந்த கேள்வி எழுந்தாலும் என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று போன் நம்பரையும் கொடுத்து அனுப்பினோம். உங்களின் மிகுந்த விளக்கத்துக்கு மிக்க நன்றி, கண்டிப்பாக உங்களுக்கு போன் பண்ணுவேன் என்றவாறே விடைபெற்றனர். அவர்களுக்கு நேர்வழி காட்டிடு இறைவா!

நீங்கள் சார்ந்திருக்கும் இடங்களிலும் தாஃவா ஸ்டாலை ஏற்படுத்துங்கள். இதன் மூலம் எண்ணற்ற மக்களுக்கு கடவுள் கொள்கையில் தெளிவு கிடைக்க உந்து சக்தியாக உங்களையும் உங்கள் முஹல்லாக்களையும் ஆக்குங்கள்.

முன்வாருங்கள் சகோதரர்களே!

◆◈◈◈◆

19. அம்மா அறிமுகப்படுத்திய 'கார்ல் மார்க்ஸ்' எனும் மகன்!



கொஞ்ச நேரம் இப்படி உட்கார்ந்து கொள்கிறேன்ப்பா! என்று நம்ம ஸ்டால் அருகில் அமர்ந்த வயதான ஒரு அம்மாவிடம், உட்கார்ந்து கொண்டே இத படிங்க என்று ஒரு தெய்வமா? பல தெய்வமா? புத்தகத்தை எடுத்து கொடுக்க, இரண்டு, மூன்று பக்கங்களை பிரட்டியபிறகு, என் மகன் இப்ப வருவான், 'கார்ல் மார்க்ஸ்'ன்னு பெயர், அவன்ட்ட பேசுங்க, அவன் 'கடவுள் நம்பிக்கை இல்லாதவன்' என்றார். சிறிது நேரத்தில் கார்ல் மார்க்ஸ் என்ற இளைஞர் மனைவி, சிறு பிள்ளைகளுடன் வந்தார். வசதியாக சேரில் உட்கார வைத்து அளவிளாவினோம்.

நீங்க ரொம்ப 'இன்டலிஜென்ட் போல', அம்மா உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லைன்னு சொன்னாங்க, என்றோம்.

பொதுவாக கடவுளைப் பற்றி யோசிக்க கூடியவர்கள், உலகத்தைப் பற்றி யோசிக்க கூடியவர்கள், நாம் இந்த உலகத்துல ஏன் பிறந்திருக்கிறோம்?, வாழ்கிறோம்? என்று யோசிக்க கூடியவர்கள், எல்லாருமே ரொம்ப இன்டெலிஜெண்டா தான் இருப்பாங்க ஆனா என்ன? அவர்களுடைய யோசனைக்கு தெளிவான விடை ஆதாரபூர்வமாக கிடைக்காததின் தொகுப்பே 'கடவுள் நம்பிக்கை அற்ற' நிலைக்கு கொண்டு போகிறது என்றதும், எப்படி சார்! இவ்வளவு ஈஸியா சொல்லிட்டீங்க. என்று ஆச்சரியப்பட்டார்.

உங்களுக்கு தெளிவு குர்ஆன் மட்டும்தான் கொடுக்க முடியும் என்றதும், குர்ஆனைப் படித்துப் பார்க்கனும் என்று நினைத்திருக்கிறேன். அதற்கான வாய்ப்பு இப்பொழுதுதான் கிடைக்கிறது என்றார்.

தெளிவு கிடைக்காத ஒரு சில முக்கியமான விஷயங்களாக நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பவைகளுக்கு குர்ஆன் ரொம்ப ஈஸியா உங்களுக்கு பதிலை சொல்லி புரியவைத்திடும் என்று சொல்லி மேலதிகமாக

"இறைவன் இருக்கின்றானா? நேரில் காட்சி தருவானா?" மற்றும் **"உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?"**

புத்தகத்தையும் கொடுத்தோம். கண்டிப்பாக இதையெல்லாம் படிப்பேன் சார்? உங்களை தொடர்பும் கொள்வேன் என்றவராக விடைபெற்றார் கார்ல் மார்க்ஸ்.

யா அல்லாஹ்! கார்ல் மார்க்ஸ் மற்றும் அவர்கள் குடும்பத்தார்களுக்கு நேர்வழி காட்டு!

இந்த வாய்ப்பை தீவுத்திடலில் எங்களுக்கு அளித்த அல்லாஹ்வுக்கே எல்லா புகழும். அனவருக்கும் அருள்புரி யா அல்லாஹ்!

◆◈◈◈◆

20. விஜயராகவனின் மகளும், பேத்திகளும் "முஸ்லிம்கள்"

நெற்றியில் பட்டையும் கழுத்தில் உத்திராட்சை மாலையும் அணிந்தவராக வந்து நின்ற விஜயராகவனின் மகள் மற்றும் வளர்ந்த பேத்திகள் முஸ்லிமான தோற்றத்தில் இருந்தார்கள். தான் ஒரு முஸ்லிமை காதலித்து திருமணம் செய்து கொண்டு தற்சமயம் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்வதாக கூறிய பெண்மணி இது தன்னுடைய அப்பா விஜயராகவன் என்று கூறினார். வயது முதிர்ந்தவராகவும் இருந்தார். ஓரிறைக் கொள்கையை தெளிவாகக் எடுத்து கூறி இன்று நீங்கள் பார்க்கக் கூடிய முஸ்லிம்களுடைய மூதாதையர்கள் அனைவருமே முன்னொரு காலத்தில் உண்மையான இறைவன் அல்லாத மற்றவைகளை வணங்கிக் கொண்டிருந்தவர்கள் தான். அவர்களுக்கு இறைவன் புறத்திலிருந்து நேர்வழி வந்ததின் பின் அதைப் பின்பற்றிய அவர்களின் வழித் தோன்றல்தான் இன்றைக்கு நீங்கள் பார்க்கக்கூடிய அப்துல்லாஹ்வும், அப்துர் ரஹ்மானும், ஜமாலும் (அவருடைய மருமகன் பெயர்). உங்களுக்கு இந்த காலகட்டத்தில் உங்கள் மகள் மற்றும் பேத்திகள் மூலமாக ஓரிறைக் கொள்கையை பற்றிய தெளிவு கிடைத்திருக்கிறது. நீங்கள் இந்த குர்ஆனை படியுங்கள். உங்கள் மகள், மருமகன், பேத்தி சொல்வதை ஏற்றுக் கொண்டு நீங்களும் ஓரிறைக் கொள்கையாளனாக உங்கள் உள்ளம் ஆமோதிப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றோம். குர்ஆனைக் கண்டிப்பாக படிப்பேன் சார். மேலும் நீங்கள் சொல்லுவதை முயற்சிக்கிறேன் என்றவரிடம் **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** புத்தகத்தையும் கொடுத்து அனுப்பினோம். மகளும், பேத்திகளும் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள் நாம நேரடியாக தெளிவாக இஸ்லாத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று விவரித்ததை எண்ணி அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவர்களாக, கண்கலங்கியவர்களாக விடைபெறறனர். யா அல்லாஹ, விஜயராகவனுக்கு நேர்வழி காட்டு!.

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு! இந்த வாய்ப்பை

நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு! இதே போல தேடுகின்ற மக்களுக்கு தொடர்ந்து விளக்கம் அளிக்க வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

21. ஹோலி ரெடிமர்ஸ் டீச்சரும், ஸ்கூலில் வைக்க தேடிய குர்ஆனும்!



குர்ஆன் ஃபிரியாவா குடுக்கிறீங்க? என்ற கேள்வி கேட்டவாறு வந்தார்கள் அம்மாவும், மகளும்! ஆமாம்! குர்ஆன் பற்றி எதுவும் தெரியுமா? என்று கேட்டவாறே அவர்களுக்கு விளக்க முற்பட்டோம்.

தான் டீச்சராக ஹோலி ரெடிமர்ஸ்ஸில் வேலை பார்ப்பதாகவும், முஸ்லிம் பிள்ளைகள் படிக்க இந்த குர்ஆன் கொண்டு போலாமேன்னு மனசில தோன்றியது என்றார்.

அவர்கள் கிறிஸ்தவராக இருந்ததால் அவர்களுக்குண்டான விளக்கத்தை எடுத்துரைத்து குர்ஆன்தான் கடைசி வேத புத்தகம் என்றும் இதைதான் நாம் அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும் என்று இறைவன கட்டளையிடுகிறான். ஆகவே நீங்கள் இந்த குர்ஆனை கொண்டு போய் முதலில் படியுங்கள் என்றோம். ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டு தன் மகள் சென்னை காலேஜில் படிப்பதாக சொன்னார். அவருக்கும் குர்ஆன் ஆங்கில மொழி பெயர்ப்பு கொடுத்து, **"இயேசு, மோ பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள உண்மைகள்"** புத்தகத்தின் தமிழ் மற்றும் ஆங்கில பதிப்புகளை கொடுத்து அனுப்பினோம். இவர்களுக்கும் நேர்வழி காட்டிடு இறைவா!

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

22. அப்ப இவ்வளவு நாளா நாங்க வணங்குவது தப்பா சார்? – கணேஷ்



15-16 வயது இளைஞர்கள் சிலர் ஒரு சேர வர, நாம் அவர்களுக்கு கடவுள் கொள்கையை தெளிவாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தோம். நாம் வணங்க வேண்டிய இறைவன் யார்? உலகம் தோன்றியதில் இருந்து இறைவன் முக்கியமாக மூன்று கட்டளைகளையே மனித குலத்திற்கு தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு வருகிறான். அதில் முதல் கட்டளை படைத்த அந்த இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதே! நடைமுறையில நம்ம எல்லாருமே நம்முடைய பெற்றோர் சொல்லித் தந்தவைகளை தான் கடவுளாக வணங்கிக் கொண்டு வருவோம் அப்போ நம்ம உலகத்துல 800 கோடி மக்கள் இருக்கிறோம். அவங்கவங்க பெற்றோர் சொல்லித் தந்ததே கடவுளா வணங்கினால் கடவுள் வந்து கோடி கணக்கில் இருக்கும் ஆனால் நாம் எல்லாரையும் படைத்தது ஒரே இறைவன் என்று மனது சொல்கிறது. அப்ப யார் அந்த இறைவன்? அப்படிங்கற கேள்வி எழுகிறது அந்த கேள்விக்கு தான் இறைவன் தெளிவாகவே இறைவன் யாரென்று இறைவனுடைய பண்புகளாக நான்கு பண்புகளை சொல்லுகிறான். அவை முறையே... **"(நபியே!) நீர் கூறுவீராக அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (குர்ஆன் 112: 1-4)** இந்த நான்கு பண்புகள் யாருக்கு ஒத்துப் போகிறதோ அதுதான் நம் வணங்க வேண்டிய இறைவன் என்று நாம் அவர்களுக்கு எடுத்துக் கூற வந்திருந்த இளைஞர்கள் ரொம்ப ஆர்வத்துடன் அதை செவிமடுத்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஏதாவது கேள்வி


இருந்தா கேளுங்க என்று கேட்க இளைஞர்கள் அவர்கள் பாணியில் கேள்விகளால் துளைத்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். கேட்ட கேள்விக்கு விடை கிடைத்த மகிழ்ச்சியில் எல்லாரும் விடைபெற்றுப் போகும் பொழுது கணேஷ் நம்ம பின்னாடி இருந்து வந்து ஒரு கேள்வி கேட்டார் அப்போ நாங்க இதுவரைக்கும் வணங்குனது தப்பா சார்? என்று.

ஆமாம். உலகத்தில் உள்ள எல்லோருக்கும் ஒரே இறைவன்தான் என்றால் அது இப்டித்தான் எல்லோரையும் சிந்திக்க வைத்து, உண்மையை உடனடியாக ஏற்று தெளிவு பெற வைக்கும் என்று சொல்லி அனைத்து இளைஞர்களுக்கும் **ஒரு தெய்வமா? பல தெய்வமா?** புத்தகத்தை கொடுத்து, என்ன கேள்வி எழுந்தாலும், என்ன விளக்கம் தேவைப்பட்டாலும் தாராளமாக போன் பண்ணுங்கள் என்று சொல்லி ஆளுக்கொரு குர்ஆனையும் கொடுத்து அனுப்பி வைத்தோம். மகிழ்ச்சியுடன் விடைபெறறனர். இறைவா! கேட்ட அனைத்து இளைஞர்களுக்கும் நேர்வழி காட்டு!

யா அல்லாஹ்! எங்கள் இறைவா! தேடி வந்து செய்தியை கேட்டுச் செல்லும் **இம்மக்களுக்கு நேர்வழி காட்டிடு!** இந்த வாய்ப்பை **நல்கியவர்களுக்கும் பேரருள் இரு உலகிலும் அளித்திடு!** இதே போல **தேடுகின்ற மக்களுக்கு** தொடர்ந்து விளக்கம் அளிக்க **வாய்ப்பையும், பொருளாதார உதவிகளையும் கணக்கின்றி அளித்திடு!**

◆◈◈◈◆

23. அன்பளிப்பாக சென்ற குர்ஆன் ஒரு வீட்டில் ஏற்படுத்திய மாற்றம்



சமையல் வேலையை முடித்து விட்டு சோ்ில் வந்து அமர்ந்த பெண்மணி அருகிலிருந்த தடிமனான ஒரு புக்கை எடுத்து புரட்டுகிறார். படிக்கும் பொழுது சில விஷயங்கள் புரிகிறது சில விஷயங்கள் புரியவில்லை அதை மூடி வைக்கிறார். பின்பு சிறிது நேரம் கழித்து மீண்டும் அதை திறக்கிறார். முன்பு போலவே இப்பொழுதும் நடக்கிறது இதேபோல், நாட்கள் கடக்கின்றன சில மாதங்கள் கடக்கின்றன அதற்குப்பின் அவருக்கு கீழ்க்கண்ட விஷயங்கள் மனதிற்கு தெளிவாக புரிகிறது.

1. நாம் வணங்கி கொண்டிருப்பவைகள் உண்மையான தெய்வம் அல்ல.
2. நாம் தவறில் இருக்கிறோம்.
3. நாம் வணங்க வேண்டியது அந்த ஒரு இறைவனையே என்றும்
4. அவன் கட்டளையிட்ட ஏவல், விலக்கல்களையே பின்பற்றி நடக்க வேண்டும் என்றும்
5. நாம் இறந்த பிறகு ஒரு வாழ்க்கை இருக்கிறது அதில் சொர்க்கம் நரகம் இருக்கிறது. இறைவனின் கட்டளையை பின்பற்றினால் மட்டுமே சொர்க்கம் செல்ல முடியும் என்பதையும், நம் வாழ்க்கையின் தற்சமய நிலையில் கழித்தால் நரகம் செல்ல நேரிடும் என்றும் அவர் உணர்கிறார்.

உணர்ந்த அந்த பெண்மணிக்கு வயது 30க்கு மேல், ஒரு குழந்தை உள்ளது.

அவர் வீட்டில் நடந்தது இதுதான்.

எங்கிருந்தோ பெறப்பட்ட அன்பளிப்பு குர்ஆன் அவர் கணவர் மூலம் அந்த வீட்டுக்கு வருகிறது கொண்டு வந்த கணவர் எல்லோரையும் போல் அதை டேபிள் மேல் வைத்துவிடுகிறார். மறுநாள் கணவர் அலுவலகத்திற்கும், குழந்தை ஸ்கூலுக்கும் சென்ற பின், தன்னுடைய சமையல் வேலையை முடித்து விட்டு, மேஜை மீது வைக்கப்பட்ட குர்ஆனை அந்தப் பெண்மணி தற்செயலாக எடுத்து புரட்டுகிறார். தொடர்ச்சியாக தினந்தோறும் குர்ஆனை பார்த்துவந்த பெண் கடைசியில் இஸ்லாத்தைத் தழுவ நினைக்கிறார். ஆனால் அன்பளிப்பாக வாங்கிக்கொண்டு வந்த கணவரோ அதை படிக்கவே இல்லை. உண்மையை தெளிவர உணர்ந்த பெண்மணியோ உடனே தான் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என்று கணவரிடம் கூறுகிறார் ஒன்றுமே படிக்காத காரணத்தினால் அவரால் அதை விளங்க முடியவில்லை. ஆனாலும் தான் படித்த கொள்கை, தான் படித்த கருத்து உண்மை என்று உணர்ந்த அந்த பெண்மணி விடாப்பிடியாக அவருடைய குழந்தையுடன் இஸ்லாத்தை தழுவுகிறார். பின்பு அவருடைய வாழ்க்கை பல நல்ல மாற்றங்களுடன் ஓரிறைக் கொள்கையில் உறுதியாக தொடர்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.

இறைவனுடைய வேதத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது நம் கடமை. மீதி வேலையை குர்ஆன் செய்து கொள்ளும் (அல்லாஹ்வின் நாட்டப்படி) சகோதரர்களே!


மாற்றங்களை எவ்விதத்திலும் சாத்தியப்படுத்துவது இறைவனே என்பதற்குக் மேற்கண்ட நிகழ்வே ஒரு சாட்சி!

உங்கள் ஊரில் இது உங்களுடைய பணி, கடமை, நீங்கள் அதற்கான முயற்சியை, வாய்ப்பை செய்கிறீர்களா என்பதே கேள்வி?

முன்வாருங்கள் சகோதரர்களே ! அருள்புரி இறைவா.

◆◈◈◈◆

24. அன்பளிப்பாக பெறப்பட்ட குர்ஆன மூலம் நாத்திகப் பேராசிரியருக்கு நேர்ந்தது என்ன?



டாக்டர் ஜெப்ரி லேங் (Dr.Jeffrey) அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைகழகத்தில் PEACE (University of Kansas) கணினித் துறை பேராசிரியராய் இருப்பவர். தன் பதினாறு வயதிலிருந்து தன் 28-ஆவது வயது வரை நாத்திகராக இருந்தவருக்கு நேர்ந்த மனமாற்றத்தை அவரே கூறுவதைக் கேட்போம். புத்தகங்களையும் படித்தாகி விட்டது, புதிதாக ஒன்றுமில்லை. படிப்பதற்கு அப்போது, மேசையில் இருந்த குரான் கண்ணில் பட்டது.

வீட்டில் போரடிக்கும் போது, ஒரு வார இதழை எடுத்து நாலு பக்கங்களை புரட்டி பின்னர் வைத்துவிடுவோமே, அதுபோல நினைத்துதான் குரானைத் திறந்தேன். குர்ஆனில் குறை கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணமெல்லாம் இல்லை. என்னைப் பொறுத்தவரை கடவுள் இல்லை, அவ்வளவுதான். இது மற்றுமொரு புத்தகம், அவ்வளவே...

முதல் அத்தியாயத்தை பார்த்தேன், அல் பாத்திஹா என்றிருந்தது. அதில் ஏழு வசனங்கள். நல்ல அழகான, கோர்வையான வசனங்கள் முஸ்லிம்கள் குரானை இறைவேதமென்று சொன்னாலும், என்னைப் பொறுத்தவரை அது மனிதரால் எழுதப்பட்டது. அதனால், இந்த புத்தகத்தை எழுதியவர் நல்ல இலக்கியவாதி என்று பாராட்டினேன். நல்ல புத்திசாலி என்றும் நினைத்தேன், படிப்பவர்களை துவக்கத்திலேயே நன்றாக கட்டிப்போடுகிறாரே...

அதில் ஒரு வசனம்,

தீர்ப்பு நாளின் அதிபதி (திருக்குர்ஆன் 1:3)

என்ன தீர்ப்பு நாளா, இவரே மக்களுக்கு கஷ்டத்தை

கொடுப்பாராம், இவரே தீர்ப்பு சொல்லுவாராம். என்று கோபப்பட்டேன்...

முதல் சூரா என்னை மேற்கொண்டு படிக்க தூண்டியது. அடுத்த அத்தியாயம், சூரத்துல் பகரா...அதன் இரண்டாது வசனம்,

இது திரு வேதமாகும்; இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு நேர்வழி காட்டியாகும். (திருக்குர்ஆன் 2:2)

என்ன ஒரு அதிகார தோரணை என்று வியந்தேன். நிச்சயமாக இந்த புத்தகத்தை எழுதியவர் அறிவாளிதான். அதுமட்டுமல்லாமல் ஒரு அறிவுசார்ந்த விவாதத்திற்கு தயார்படுத்தின அந்த வசனங்கள். படித்துக்கொண்டே வந்தேன். அந்த சூராவின் முப்பதாவது (30) வசனம் ஒரு கனம் என்னை திக்குமுக்காட செய்தது. ஏனென்றால் என் மனதில் நீண்ட நாட்களாக இருந்த கேள்வி அங்கு கேட்கப்பட்டிருந்தது.

ஏன் கடவுள் அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? என்ற கேள்விதான் அது. என்னுடைய கேள்வியை இங்கே வானவர்கள் கேட்கின்றனர். இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி **"நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்"** என்று கூறியபோது, அவர்கள் **"நீ அதில். குழப்பத்தை உண்டாக்கி ரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னை துதித்து, உன் பரிசுத்தத்தைப் பாற்றியவர்களாக இருக்கின்றோம்".** என்று கூறினார்கள். **(திருக்குர்ஆன் 2:30)**

இந்த ஒரு வசனம் என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.நான் நாத்திகனாக மாறியதில் இந்த ஒரு கேள்விக்கு நிச்சயம் முக்கிய பங்குண்டு.

வானவர்கள் கேட்பது நியாயம்தானே?. அவர்களோ தவறு செய்யாதவர்கள், இறைவனுக்கு கட்டுப்பட்டவர்கள், அவர்களையே பூமியில் வாழ வைத்திருக்கலாமே? ஏன் இந்த அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? வானவர்களின் கேள்வி மிக நியாயமானது. இதற்கு என்ன பதில் என ஆர்வமுடன் மேற்கொண்டு படித்தேன் அதே வசனத்தின் இறுதியில், அவன் **"நீங்கள்**

அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" - (திருக்குர்ஆன் 2:30)

என்ன நீ அறிவாயா? ஏன் பாவம் செய்யக்கூடிய மனிதர்களை படைத்தாய் என்று கேட்டால், அதற்கு அனைத்தையும் நீ அறிவாய் என்பதுதான் பதிலா? இப்போது குரானுடன் நான் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்து விட்டேன் (சிரிக்கிறார்), இந்த குரானை முழுமையாக படித்து என் மற்ற கேள்விகளுக்கும் என்ன பதிலளிக்கிறது என்று பார்த்து விட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

நாலு பக்கங்கள் மட்டுமே திருப்பலாம் என்றிருந்தவனை இந்த குரான் மென்மேலும் படிக்க தூண்டிக்கொண்டே இருந்தது, என்னுடைய கேள்விகள் ஒவ்வொன்றாய் பதிலளிக்கப்பட்டு கொண்டே வந்தன.

என் அனுபவங்களை முழுமையாக சொல்ல இந்த நேர்க்காணல் நேரம் போதாது. ஆனால் நான் சொல்ல விரும்புவதெல்லாம், குரானை மட்டும் படித்த பிறகு, தனிப்பட்டமுறையில் என் கேள்விகளுக்கு விடைகள் கிடைத்தன.

குரானின் வசனங்கள் ஆணித்தரமானவை, ஆழ்ந்த கருத்துக்களை கொண்டவை. பிறகு என் இருபத்தி எட்டாவது வயதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். ஒருமுறை என் மகள் கேட்டாள்,"சரி Dad, குரான் உங்கள் கேள்விகளுக்கு பதிலளித்து விட்டது. உங்கள் கேள்விகளுக்கெல்லாம் ஒரு புத்தகம் பதிலளித்து விட்டால் மட்டும் இறைவன் இருக்கிறானென்று ஆகிவிடுமா, அல்லது அந்த புத்தகம் இறைவனிடமிருந்து வந்துவிட்டதாக தான் நீங்கள் நினைத்துவிட முடியுமா?"

இது என்னிடம் பலரும் கேட்க நினைக்கக்கூடிய அர்த்தமுள்ள கேள்வி. நான் குரானை மென்மேலும் படிக்க படிக்க, என் கேள்விகளுக்கு பதில்கள் கிடைக்க துவங்கின. பதில்கள் கிடைக்க கிடைக்க நாத்திகத்தை கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டேன்.

நான் எந்த அளவு குரானை மேற்கொண்டு படித்தேனோ அந்த

அளவு நாத்திகத்தை கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டேன். நான் கடவுள் இல்லை என்பதில் மிக உறுதியாய் இருந்தவன், யார் எப்படி விளக்கினாலும் கடவுள் இல்லை என்பதில் நின்றவன்.

ஆனால் குரான், அதனைப்பற்றி நிறைய எழுப்பிவிட்டது. கேள்விகளை அதுமட்டுமல்லாமல், குரானைப் படித்து முடித்ததும் என் மனதில் ஏற்பட்ட அமைதி இருக்கிறதே, இதுநாள் வரை வாழ்வில் அனுபவிக்காதது. இறைவனின் அன்பு என்பது இதுதானோ? சில நேரங்களில் அந்த உணர்வு பத்து, பதினைந்து நிமிடங்கள் கூட நிலைத்திருக்கும். என் மனம் அமைதியடைந்தது, ஒரு அற்புதமான உணர்ச்சி அது.

என் வாழ்நாளில் கஷ்டங்களை அதிகம் பார்த்தவன், அந்த அற்புத மன அமைதி எனக்கு பதிலளித்துவிட்டது, இறைவன் இருக்கிறானென்று, இது இறைவேதமென்று. குரானை ஓதும்போது பலமுறை கண்கலங்கியிருக்கிறேன், அன்பு என்றால் என்னவென்று புரியவைத்தது குரான் தான். பலரும் என்னிடம் கேட்பார்கள், "இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் உங்கள் வாழ்வில் என்ன திருப்பம் வந்துவிட்டது" என்று.

நான் இப்போது மனிதர்களை அதிகம் நேசிக்க ஆரம்பித்திருக்கிறேன். இதுதான் இஸ்லாம் எனக்கு கற்றுகொடுத்த முதல் பாடம். தற்போது மனைவி, மூன்று குழந்தைகள் என்று ஒரு நிறைவான வாழ்வை இறைவன் எனக்கு அளித்திருக்கிறான். இஸ்லாத்தை ஏற்ற புதிதில், விடியற்காலை தொழுகைக்கும், மாலை நேர தொழுகைகளுக்கும் பள்ளியில் சென்று தொழுது வருவேன். குரான் ஓதப்படுவதை கேட்பது ஒரு மிக அழகான உணர்வு.

ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார், "டாக்டர் லோங், உங்களுக்கு அரபி புரிகிறதா?" என்று, நான் சொன்னேன், "ஒரு குழந்தை தாயை எதிர்க்கொள்கிறதே, அதுபோல தான்" என்று... வாழ்வின் அர்த்தங்களை தேடி கொண்டிருப்போருக்கு நான்

சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் ஒன்று தான். நீங்கள் தேடுவதை தொடருங்கள், ஆனால் நேர்மையாய், திறந்த மனதுடன் தேடுங்கள்.

உங்களை என் மார்க்கத்தை ஏற்க சொல்லி கட்டாயப்படுத்தி நான் என் மார்க்கத்தை விற்க விரும்பவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களுக்கே அந்த உரிமையை இறைவன் வழங்கவில்லை. எடுத்து சொல்வது மட்டும்தான் எங்கள் கடமை, உங்களை நேர்வழியில் செலுத்துவதெல்லாம் இறைவனின் நாட்டம்.

அதனால் தேடுவதை தொடருங்கள்...

◆◈◈◈◆

25. பலவித தேடல்களோடு மக்களும், தாவா ஸ்டாலும்



BBA புக் இருக்கா சார்? பொண்ணு 3வது வருடம் படிக்கிறா! என்று வந்தார் ஒருவர், அவரிடம் இல்ல சார் இங்கு நம் அனைவருக்குமான ஓரிறைவனைப்பற்றிய புத்தகங்களும், நோட்டீஸ்களுமே உள்ளன என்றதும், சரி கொடுங்க என்றார், **"ஒரு தெய்வமா? பல தெய்வமா?"** என்ற புக்கை கொடுத்து அனுப்பினோம். அவருடன் இருந்த நண்பர் எனக்கும் ஒன்று படிக்க தாங்க என்று கேட்டு பெற்றுக் கொண்டார்..

பக்கத்தில் வடை சாப்பிட வந்தவர், ஸ்டாலின் அருகில் தயங்கியவாறே கடக்க முயன்றார்? அவரிடம் free புக் எடுத்துக்கோங்க என்றதும், வந்தார், இஸ்லாம் பற்றிய ஏதாவது தெரியுமா? உங்களுக்கு முஸ்லிம் ஃபிரண்ட் இருக்காங்களா? என்றதும்.

ஆமா சார் அப்துர் ரஹீம் என்ற நண்பர் இருக்கிறார் என்றார். ரொம்ப நல்ல மனிதர் சார்! ரோட்டில் எச்சில் துப்பக் கூடாது. நம்ம யாருக்கும் இடையூறு பண்ணகூடாது அப்படின்னு நல்ல நல்ல கருத்துக்களை சொல்லுவார் சார். ரொம்ப அமைதியாகவும், ஒழுக்கமாக இருப்பார் சார்! எனக்கு ரொம்ப பிடிக்கும் சார் என்றார். பிறகு நாம் அவரிடம் உங்கள் நண்பர் அப்துர்ரஹீம் சொன்ன பல நல்ல செய்திகளை உள்ளடக்கியதுதான் இஸ்லாம் என்று கூறி இஸ்லாத்தைப் பற்றியும் ஓரிறைக் கொள்கையைப் பற்றியும் எடுத்துரைத்தோம் அவரிடம் **"ஒரு தெய்வமா? பல தெய்வமா?"** என்ற புக்கையும் கொடுத்தோம் அப்பொழுது அவர் எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். அதில் இரண்டாவது குழந்தை ரூபஸ்ரீ அவள் எந்த புத்தகத்தை படித்தாலும் ஆர்வமாக முழுவதையும் படிப்பாள்

என்றார் அப்பொழுது நான் அவரிடம் இதை கொடுத்து நீங்களும் படியுங்கள், ரூபஸ்ரீயையும் படிக்கசொல்லுங்கள் அதனால் உங்கள் அனைவருக்கும் சில செய்திகள் தெளிவாகலாம் என்றோம். பின்பு அவர் புத்தகங்கள பெற்றுக்கொண்டு நகர்ந்தார்

• ஸ்டால் அருகே வந்து நின்ற ஒரு ஆட்டோ டிரைவரிடம் ஒரு நோட்டீசை நீட்டினேன் உடனே அவர் ஒரு என் வொய்ஃப் ஒரு முஸ்லிம் என்றார் உடனே நாம் அப்போ உங்களுக்கும் ஓரிறைக் கொள்கையை பற்றி தெரிந்திருக்கனுமே என்றோம். சிரித்தார். மேலும் நம் அனைவரையும் படைத்த அந்த ஓரிறைவனையே நாம் வணங்க வேண்டும், அதன் பக்கமே நீங்களும் உங்கள் மனைவியை போல் மீள வேண்டும் என்று சொல்லி கண்டிப்பாக இந்த புத்தகங்கள் எல்லாம் படிங்க அதனால் உங்களுக்கு நேர்வழி கிடைக்கலாம் என்று கூறி மேலும் சில புத்தகங்களையும் கொடுத்து அனுப்பினோம்.

இம்மக்கள் அனைவருக்கும் நேர்வழி காட்டிடு இறைவா.

உங்கள் ஏரியாவிலும் இந்த மாதிரி மக்கள் செய்திகளை கேட்க தயாராக உள்ளனர். நீங்கள் எப்போது சொல்ல போகிறீர்கள்???

◆◈◈◈◆

இறுதியாக...

அருகிலோ, நாம் வசிக்கும் இடம் சார்ந்த முச்சந்தியில், நான்கு சாலை இணைப்பில், எதாவது ஒரு ரோட்டின் ஓரத்தில் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் போடப்பட்ட "Free Quran" என்னும் தாஃவா ஸ்டால் என்னென்ன வாய்ப்புகளை இறைச்செய்தியை, ஓரிறைக் கொள்கையை தேடும் மக்களுக்கு கொண்டு போய் சேர்க்க உறுதுணையாக இருந்திருக்கிறது. உங்கள் பகுதியிலும் அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்தவர்களாக ஆரம்பியுங்கள் சகோதரர்களே!

நீங்கள் செய்யவேண்டியது என்ன?

1. Dawa Stand (3,000/- ரூபாய்)
2. தமிழ் மொழி பெயர்ப்பு குர்ஆன் - 1 (ஒன்றின் விலை ரூபாய் 140/-)
3. ஏகத்துவ, தூதுத்துவம், மறுமையை சொல்லக்கூடிய மடக்கோலைகள் - 1000 (Pamphlet ஒன்றின் விலை 1.50/-) நான்கு தலைப்புகளில், 250 each.
4. வாரம் ஒரு முறை - 2 மணி நேரம்.
5. உடன் இணைந்து நடத்த இரண்டு அல்லது மூன்று தன்னார்வ நண்பர்கள்.

இதை படிக்கும் நீங்கள் ஒரு

- ✓ பள்ளிவாசல் நிர்வாகியாயினும்
- ✓ பள்ளிவாசல் இமாமாயினும்
- ✓ ஒரு டிரஸ்ட் நிர்வாகியாயினும்
- ✓ ஏதாவது ஒரு இஸ்லாயிய அமைப்பை சார்ந்தவராயினும்
- ✓ தனி மனிதனாயினும்

இதை, இஸ்லாத்தை, ஓரிறைக் கொள்கையை எத்தி வைக்க ஒரு சிறு முயற்சியாக முனனெடுங்கள் சகோதரர்களே! அல்லாஹ் நம் முயற்சிக்கு உதவிபுரிவானாக ! இலகுவாக்குவானாக ! இதை பொருந்திக் கொள்வானாக!

மேலதிக விளக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.- **88388 92393**

◆◈◈◈◆

Quran

6 LANGUAGES

Scan here to read it


ஒரு தெய்வமா ?
பல தெய்வமா ?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

இயேசு (அலை), மேரி (அலை) பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள உண்மைகள்.

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்







இறைவன் இருக்கின்றானா?
நேரில் காட்சி தருவானா?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

एक भगवान?
या
अनेक भगवान?

पढ़ने के लिए स्कैन करें

Quran
6 LANGUAGES

Scan here to read it

ஒரு தெய்வமா ?
பல தெய்வமா ?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

இயேசு (அலை), மேரி (அலை)
பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ள
உண்மைகள்.

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்







இறைவன் இருக்கின்றானா?
நேரில் காட்சி தருவானா?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

உண்மையான இறைவனை
தேடுபவரா நீங்கள்?

படிப்பதற்கு இங்கே scan செய்யவும்

One God?
or
Many gods?

Scan here to read it